சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு பங்குனிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 10-ம் இலக்கம் |
|---|---|---|

# சமஷ்டிக்கட்சியின் சத்தியாக்கிரகம்

## தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டமாக மாறியுள்ளது

● யாழ்ப்பாணம் ● மட்டக்களப்பு ● திரிகோணமலை

வடக்கு—கிழக்குமாகாணங்களில் தனிச் சிங்களசட்டம் அமுல்நடத்தப்படுவதை எதிர்த்துச் சமஷ்டிக் கட்சி கடந்தமாதம் 20-ம் திகதி நேரடி நடவடிக்கையை ஆரம்பித்தது. யாழ்ப்பாணக் கச்சேரிக்குமுன் தமிழரசுக் கட்சி எம். பி. களும், திரளான தொண்டர்களும் சத்தியாக்கிரகம்செய்யத் தொடங்கியபோது பொலிசாரால் தாக்கப்பட்டதின் பயனாக, அவர்களுடைய எதிர்ப்பியக்கம் இப்போது தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டமாக மாறியுள்ளது. தமிழ்ப்பேசும் மக்கள் இன, மத, கட்சிவேறுபாடுகளை மறந்து, ஒருமுகப்பட்டுத் தங்கள் மொழிசம்பந்தமான அடிப்படை உரிமையைச் சாத்வீகமுறையில் போராடிப் பெற்றுக் கொள்ள முனைந்துநிற்கின்றனர். முஸ்லீம் மக்களும் இந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டமையால் தமிழ் மொழிப் போராட்டம் வலுவடைந்துவருகின்றது. தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் மட்டக்களப்பு, திரிகோணமலை, மாவட்டங்களிலும் சென்ற சிலநாட்களாகப் பேராதரவு பெற்றுவருகின்றது.

### யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கரக விஸ்தரிப்பு

யாழ்ப்பாணத்தில் கச்சேரிக்குமுன் மறியல் தொடர்ந்து நடைபெறுகின்றது. அத்துடன் மராமத்து சுகாதார சேவை, கல்வி, கூட்டுறவு அபிவிருத்தி ஆதியாம் அலுவலகங்கட்கு முன்னும் இப்போது மறியல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில் சத்தியாக்கிரகம் வலுவடைகின்றது

மட்டக்களப்பில் சத்தியாக்கிரகம் செய்யும் தொண்டர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் முஸ்லீம்கள் உட்படப் பல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் ஊர்வலமாக வந்துகொண்டிருக்கின்றனராம்.

### திரிகோணமலையிலும் மறியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

சென்ற சனிக்கிழமை திரிகோணமலையில் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டபோது தொண்டர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டனர். மூதூர் எம். பி. உட்படப் 14 பேர் காயமடைந்தனரென்று தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கச்சேரிக்குமுன் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

# சாம்ராஜ்ய மாநாட்டில்

## முதல்முறையாக ஓர்பெண்பிரதமர்

இம்மதி 8-ம் திகதி லண்டன் மாநகரில் கூடிய சாம்ராஜ்ய பிரதமர்கள் மாநாட்டில் இலங்கைப் பிரதமராகிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களும் கலந்துகொண்டார்கள். சாம்ராஜ்ய சரித்திரத்தில் ஒரு பெண் பிரதமர் இத்தகைய மாநாட்டில் கலந்துகொண்டது இதுவே முதல்தடவையாகும். மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ளும்படி பிரதமர் அவர்கள் லண்டன் விமானநிலையத்தில் இறங்கிய பொழுது, ஏறக்குறைய 50 இலங்கைத் தமிழர் கறுப்புக்கொடிகளும் சுலோக அட்டைகளும் தாங்கின்று, தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதை ஆட்சேபித்துத் தங்கள் துக்கத்தைத் தெரிவித்துநின்றனர்.

### அரசியல் சட்டமும் அடிப்படை உரிமையும்

இலங்கை அரசியல்சட்டத்திலே அடிப்படை உரிமைகளைக் கொண்ட பிரிவுஒன்றைச் சேர்ப்பதுபற்றி ஆராய்வதற்கெனச் செனற்சபையினதும், சனப்பிரதி

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

# சத்தியாக்கிரகம்பற்றி

## இ. தொ. காங்கிரசின் தீர்மானம்

தமிழரசுக்கட்சியினர் வடக்கு—கிழக்குமாகாணங்களில் நடத்திவரும் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து அரசாங்கம் இராணுவத்தை அனுப்பியதன் காரணமாக எழுந்துள்ள நிலையை ஆராயக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கூடிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கூட்டுக்கமிட்டியின் அவசரக்கூட்டம் சனிக்கிழமை காலைவரை தொடர்ந்து நடைபெற்றது.

### தீர்மானம்

"அடிப்படையுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரேவழியாகத் தமிழரசுக்கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தின் விளைவாகத் தமிழரின் மொழி உரிமைகளை மறுக்கும் அரசாங்கத்தின் பிரயத்தனங்களால் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமையையிட்டும் அந்த இயக்கத்தைத் தப்புக்கணக்குப்போட்டு நசுக்கிவிடக் கையாளப்படும் முறைகளையிட்டும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலக்கமடைந்துள்ளது. இத்தகைய இயக்கம் ஒருபோதும் நசுக்கப்படமுடியாதென்பதையும், இறுதியில் வெற்றி பெற்றேதீரும் என்பதையும் சரித்திரம் நிரூபித்துள்ளது. பாராளுமன்றத்திலே சொன்னதும் கையைத் தூக்கும்வகையில் அமைந்துள்ள பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு சட்டம் எதனையும் நிறைவேற்றிவிட்டால் அது ஜனநாயகமாகும் என்று கருதுதல் தவறாகும் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. அத்தகைய சட்டம் எந்த ஒரு பிரிவினரதும் அடிப்படையுரிமைகளை அத்துமீறுவதாயிருப்பின் அது ஜனநாயக அடிப்படைக்கு எதிர்மாறானதாகும் என்பது வலியுறுத்தப்படவேண்டியதாகும். மொழியுரிமை அத்தகைய அடிப்படையுரிமைகளில் ஒன்றாகும். இது வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழரைமட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ளோரையும் பாதிப்பதாகும். பெரும்பான்மையினருக்கு மட்டுமன்றிச் சிறுபான்மையினருக்கும்உரியஓர் உரிமைஇது. இதற்கான சத்தியாக்கிரக இயக்கம் மிகவும் அமைதியான முறையில் நடந்தபோதிலுங்கூட அரசாங்கம் வடக்கு—கிழக்குப் பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்பியதை இட்டு இ.தொ. காங்கிரஸ்பெருங் கவலையடைந்துள்ளது. அரசாங்கத்தின் இந்தப் போக்குத் தேசிய முன்னேற்றத்தையும், பொருளாதாரமுன்னேற்றத்தையும் தடைப்படுத்தும் என்பதை இ.தொ.கா. சுட்டிக்காட்டுவதுடன் இராணுவத்தைத் திருப்பியழைத்துக்கொண்டு மேலும் நிலைமை மோசமாகாதவகையில் பேச்சுவார்த்தை நடத்துமாறும் வற்புறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இன்று ஞானோபதேசம் கற்பித்தல் இன்றியமையாத கடமை"

### திரிகோணமலை மேற்றிராணியாராகிய மகாவந். இக்னேஷஸ் கிளெனி, யே. ச. ஆண்டகை அவர்கள் விடுத்த

## தபசுகால நிருபம்

தற்கால சூழ்நிலைக்கேற்ப நாம் கொடுக்கக்கூடிய ஒழுங்குகளுள் ஞானோபதேசம் கற்பித்தல் பற்றியவையே மிகக் காத்திரமானவை என்று நம்புகின்றோம். திருச்சபையின் போதகப் பொறுப்புகளுள் ஞானோபதேசம் கற்பித்தல் எப்போதும் முக்கிய இடம் பெற்று வந்துள்ளது. ஆனால், இப்போது இருக்கும் விசேஷ நிலைமைகளின் நிமித்தம் ஞானோபதேசம் ஊட்டும்கடமை இன்றியமையாததாய் மாறியுள்ளது.

### ஞானோபதேசம் கற்பித்தல் என்றால் என்ன?

"நீங்கள் உலகமெங்கும்போய் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மார்க் 16: 15). இதுவே திருச்சபைக்குக் கிறீஸ்துநாதரால் பகிரங்கமாய்க் கொடுக்கப்பட்ட பொறுப்பாகும். கடவுளால் கொடுக்கப்பட்ட இந்தக் காத்திரமான பொறுப்பை நிறைவேற்றத் திருச்சபையானது ஞானோபதேசம் கற்பித்தலையும், சுவிசேஷம் போதிப்பதையுமே இருமுக்கியகருவிகளாகப் பாவித்துவருகின்றது. சுவிசேஷ போதனையானது குறிக்கப்பட்ட சில நேரங்களில் குறிப்பான சில வேத சத்தியங்களை மட்டுமே விளக்கமுடியும். ஞானோபதேசப் படிப்போவெனில், கிறீஸ்தவபோதகம் முழுவதையும் விளக்கவல்லது. அதுவேத அறிவிலும் அதன் மதிப்பிலும் வளருவதற்குத் தகுந்த அஸ்திவாரத்தைக் கிரமமாக ஏற்படுத்தும். இந்த அஸ்திவாரத்தின் மேலே நமது கத்தோலிக்க சீவியம் கட்டிஎழுப்பப்படவேண்டும் என்பது உண்மை.

போதிக்கும்படி திருச்சபைக்கு ஒப்பிக்கப்பட்ட பரிசுத்த சுவிசேஷமானது இரட்சணியத்தின் சுபசெய்தியாகவும், ஓர் புதிய சீவியமுறையாகவும் இருக்கிறது. இச்சீவிய முறையைக்கடைப்பிடித்தால் இம்மையில் உண்மையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், சிநேகத்தையும், மறுமையில் அளவில்லாத ஆனந்த அக்களிப்பையும் அது நமக்கு அளிக்கும் என்பதுநிச்சயம். சுவிசேஷ போதனை சீவியத்திற்குரியது. அது நமது சுபாவத்தோடு இரண்டறக் கலந்து நமது ஒவ்வொரு சிந்தனை, ஆசை, செயலிலும் தனது செல்வாக்கைச் செலுத்தவேண்டும். ஆதலால், இளைஞர்கள் வேதபோதகத்தை மனப்பாடமாக்கவும், சொல்லவும் செய்தல் மாத்திரமல்ல, அவர்களுடைய மனதிலும், இருதயத்திலும், வேதத்தின் அஸ்திவாரத்தை நிலைநாட்டி அதன்படி அவர்கள் சீவித்துவரச் செய்வதுமே ஞானோபதேசம் கற்பித்தலின் நோக்கமாகும். இதனால், ஒரு கத்தோலிக்க சனசமூகம் உண்மையான கிறீஸ்தசீவியம் நடத்தவேண்டுமாயின், கிறீஸ்துநாதர் திருச்சபைக்கு ஒப்புவித்த உயிரளிக்கும் வேதபோதகத்தை அது நன்குபயின்றிருக்க வேண்டுமென்பது தானாகவே விளங்குகின்றது. அன்றேல், தப்பானபடிப்பினை அவர்களைப் பெயரளவில் மாத்திரமே கிறீஸ்தவர்களாக இருக்கப்பண்ணும்.

இந்தமுகாந்திரங்களையிட்டே திருச்சபையானது காலாதிகாலமாக ஞானோபதேசக்கல்வி மிகவும்முக்கியமானது எனக்கருதிவந்துள்ளது. தனது பிள்ளைகட்கு இக்கல்வியை ஊட்டுவதற்குத் திருச்சபைதன்னால் இயன்றதெல்லாம் ஏன் செய்துவருகிறதென்று இப்போது நமக்கு விளங்குகின்றது. இன்னும், இந்தக்காலத்தில் இதுவிஷயத்தில் மிகவும்கூடிய சிரத்தை தேவையென்றும் நாம் உணருகின்றோம். திருச்சபைக்குச் சங்கடமான எதிர்காலம் உண்டாகக்கூடும். நமது விசுவாசத்திற்கு ஆபத்துக்கள் எல்லாப்பக்கத்தாலும் ஏற்படக்கூடும். நமது பிள்ளைகள் விசுவாசத்திலே உறுதியாய்ப் பயிற்றப்பட்டிராவிட்டால், கிறீஸ்துநாதர் அளித்த நித்தியசீவியத்தின் நற்செய்தி அவர்களுடைய சீவியத்தில் ஆதிக்கம் செலுத்தாவிட்டால், அவர்கள் எல்லோரும் ஏமாற்றப்பட்டு மாண்டுபோகக்கூடிய அபாயகரமான நிலைஏற்படும். எமக்கு இப்போதுபோதிய நேரகாலம் இல்லாதபடியால் நாம் அதிகவேகமாய் வேலையில் ஈடுபடவேண்டும். நம்மால்இயன்ற சகலபரித்தியாகங்களையும்புரிந்து, எமது இளைஞர்களுக்குத் தகுந்தவிதத்தில் ஞானோபதேசம் கற்பிப்பதில் அதிகசிரத்தை எடுப்போமாக. இது விஷயத்தில் காலதாமதம் பெருந்தீங்கு விளைவிக்கும்.

### ஞானோபதேசம் கற்பிக்கக் கூடியவர்கள் யார்?

"சுவிசேஷத்தைச் சகலதேசமக்கட்கும் பரம்பரை பரம்பரையாய்ப் படிப்பிக்கும் தத்துவம் திருச்சபைக்கு மாத்திரமே கிறீஸ்துநாதரால் கொடுக்கப்பட்டுள்ளது" (மத். 28: 19). ஆகையால், இந்தத் தொண்டிற்குப் போதகர்களை நியமிக்கும் உரிமையும், கடமையும் திருச்சபைக்கேயுளது. மேலும் "திருச்சபையே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறது; ஞானஸ்நானத்தில் உற்பத்தியான வரப்பிரசாதசீவியம் மலர்ச்சி அடைவதற்கு அந்தத்தாயாகிய திருச்சபையே ஆவனசெய்தல் வேண்டும்" (யுங்மன்: 65 பக்).

சுபாவமுறைப்படி பெற்றோர் தமது பிள்ளைகட்குக் கல்விஊட்டக் கடமைப்பட்டவர்களாய் இருப்பதால், அக்கடமையை நிறைவேற்ற அவர்களுக்கு ஆற்றல் இருக்கும்வரை வேதக்கல்வி ஊட்டுவதற்கும் திருச்சபையானது அவர்களைத் தனது ஊழியர்களாகக் கையாளுகின்றது. இத்திருப்பணிக்குப் பெற்றோருக்கு ஓர் விசேஷ அதிகாரம் தேவையில்லை, பெற்றோர் என்ற முறையில் இவ்வதிகாரம் அவர்களுக்கு மெய்விவாக பந்தனத்தினால் வருகின்றது. பெற்றோரே, உங்களுக்குள்ள பாரதூரமான கடமைகளுள் உங்கள் பிள்ளைகட்கு வேதக்கல்வி ஊட்டுவதே மிகவும் பூச்சியமான கடமையாகும். உங்கள் பிள்ளைகளுடைய நித்தியசீவியம் அதிலேதான் தங்கிஇருக்கலாம் என்பதை, நீங்கள் உணரவேண்டும். ஒரு குழந்தையின் உள்ளம் எவ்வளவு மிருதுவானது என்று நாம் அறிவோம். முதன் முதல் மனதில் பதிக்கப்பட்டவை ஒரு ஆன்மாவின் சீவியம் முழுவதிலும் நன்மைக்கோ, தீமைக்கோ காரணமாக இருக்கும். ஆகையால் பெற்றோரே, பாலகயேசு எப்படி "சர்வேசுரனுக்கும் மனிதனுக்கும் முன்பாகஞானத்திலும், பிராயத்திலும், வரப்பிரசாதத்திலும் வளர்ந்து கொண்டுவந்தாரோ" (லூக் 2: 52), அதேவிதமாக உங்கள்பிள்ளைகளும் வளர, வளர அவர்களது இளம் மனதுகளையும், இருதயங்களையும் பண்படுத்தி வளர்த்துவர உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம் உண்டல்லவா!

பெற்றோர் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற இயலாதபட்சத்தில்தான் திருச்சபை தனது தூதர்களை அனுப்புகின்றது. இவர்கள் குருப்பிரசாதிகள். ஒருகுருவானவர் தனது வேதசாஸ்திர கல்விப்பயிற்சியினால் தேவவாக்கியத்தைப்படிப்பிக்க மற்றவரைப்பார்க்கிலும் கூடியவல்லமை பூண்டிருக்கிறார். அவர் குருப்பட்டத்தினால் கிறீஸ்துவின் பிரதிநிதியாக மாறியுள்ளார். குருப்பிரசாதிகட்குள்ளே இதுவிடயத்தில் கட்டளைக்குருக்களும், விசாரணைப்பங்குகளில் கடமையாற்றும் மற்றும்குருக்களும் முதலிடம் பெறுகின்றனர். இவர்கள் தங்கள் உத்தியோகப் பொறுப்பினால் திருச்சபையின் போதகத் தொண்டில் நெருங்கிய முறையில் பங்குபற்றுகின்றனர். இதுவிடயத்தில் திருச்சபையின் சட்டம் பின்வருமாறு: "கட்டளைக்குருவானவர் தனது ஞானமந்தையின்பாலர்களுக்குக் கத்தோலிக்க வேதப்பயிற்சியளிப்பதில் அதிக ஊக்கம் எடுக்க கடமைப்பட்டவராய் இருக்கிறார்" (தி. ச. 467, 1330). கட்டளைக்குருமாருக்கு அநேக ஞான வேலைகள் இருப்பதால், ஞானோபதேசம் கற்பிக்கும் பொறுப்பு முழுவதையும் அவர்கள் தாமாகவே செய்து முடிக்க இயலாது. ஆகையால், வேறு குருக்களும், சந்நியாசிகளும், கன்னியாஸ்திரிகளும் கட்டளைக் குருமாருக்குத் துணைபுரிய திருச்சபைத்தாய் அனுமதி அளிக்கின்றது. இத்தொண்டை அவர்கள் பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களாகவோ, அன்றேல விசாரணைப்பங்கில் உபதேசிகளாகவோ இருந்து செய்யக்கூடும். உண்மையாகவே, அவர்களின் உதவி இல்லாவிட்டால், சிறுவர்கள்மட்டில் தமக்குள்ள கடமைகளை ஆற்றுவதற்குக் கட்டளைக்குருமார் இயல்பில்லாதவர்களாகி விடுவார்கள்.

சாதாரண கத்தோலிக்கமக்களும், உபதேசிகளாய் இருக்கத் திருச்சபைத்தாய் உத்தரவளிக்கின்றது (தி. ச. 1333). இப்படிப்பட்டவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயும், நன்குபயிற்றப் பெற்றவர்களுமாயுமிருக்க வேண்டும் கூடுமானால் இவர்கள் "கிறீஸ்தவபோதக பக்திச்சபை" ஒன்றில் சேர்ந்திருக்க வேண்டும். மேலும், இவர்கள் ஞானோபதேசம் கற்பிக்கத்தொடங்குமுன் அதற்குரிய ஓர் விசேடபரீட்சையில் சித்தி அடைந்திருக்கவேண்டும்.

குருக்களும், சந்நியாசிகளும் குறைவாய் இருக்கும்பொழுது — இதுவே எமது மேற்றிராசனத்தின் நிலைமை— நன்கு பயிற்றப்பட்ட சாதாரணகத்தோலிக்கமக்கள் உபதேசிகளாய்ப் பெரும்பணியாற்றலாம் இப்படியே பல தேசங்களில் பணியாற்றப்பட்டு வருகின்றது. உதாரணமாக, பரீஸ்பட்டணத்தில் 8,000 உபதேசிமாரும், மெக்சிக்கோநகரில் 48,000 பிள்ளைகட்கு 2,143 உபதேசிமாரும் ஒவ்வொரு ஞாயிறுவாரமும் ஞானோபதேசம் கற்றுக்கொடுக்கின்றனர்.

(வளரும்)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. M. B. 2524**

காரைதீவு கிழக்கு
1. வீரகத்தி கதிரவேற்பிள்ளை
2. ஷை யூர் பெண் சிவகாமிப்பிள்ளை
— வழக்காளிகள்.

எதிராக, காரைதீவு மேற்கு
1. சுப்பிரமணியம் முத்தையாபிள்ளை
2. ஷை யூர் பெண் மகேஸ்வரியம்மா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2524-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணிகள் 1961-ம் ஆண்டு சித்திரைமீ 5-ந்திகதி புதன் கிழமை முற்பகல் ஒன்பதுமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 11,497/61சதமும், ரூபா 10,000-க்கு 30-10-1958 தொடக்கம், 27-7-1959 வரை 5வீதமானவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும், கோட்டுச்செலவு 561ரூபா 72சதமும். கோட்டுச்செலவில் ரூபா 175 கொடுபட்டது. வட்டிமுதலில் ரூபா 1,000 கோட்டில் கட்டப்பட்டது.

#### காணிகளின் விபரம்.

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று, தங்கோடையிறை "தச்சன்வயல்" பர. நெ. இலா. பதினைந்து (ப. நெ. இ. 15). எல்லை: கிழக்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்துவிற்குரிய ஆதனம். வடக்கு — சிவகுருநாதர் கணேசபிள்ளைக்கும், சகோதரனுக்கும், முருகேசு பெண் மீனாட்சிப்பிள்ளைக்கும், சிதம்பரப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் உரியஆதனங்கள். மேற்கு — முருகேசு கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — கந்தப்பு வைத்திலிங்கத்திற்கு உரியஆதனம். இதடங்கலும் சொரியலாய் $\frac{13}{14}$ பாகம். இதன் பதிவு C 248|103 லிருந்து C 309|178-க்குப் போயிருக்கிறது.

2. ஷையிறை "ஒயிலைப்புலம்" பர. நில. இலா. ஐந்தும், (ப. நி. இ. 5) பனைகள், வடலிகள், வேம்புகளும், வீடுகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு— தம்பையா பெண் சுந்தரத்திற்குரிய ஆதனம். மேற்கு — அம்பலவாணர் தம்பிராசாவிற்குரிய ஆதனமும், ஒழுங்கையும். தெற்கு — சுப்பிரமணியம் செல்லையாவிற்குரிய ஆதனம். இதடங்கலும். இதன் பதிவு C 185|199.

3. ஷையிறை "உஞ்சியாட்டி" பர. நில. இலா. பதினைந்தரை (ப. நி. இ. 15½) பனைகள், வடலிகளும். எல்லை: கிழக்கும், தெற்கும் — இராமநாதர் அம்பலவாணருக்குரிய ஆதனம். வடக்கு — வேலுப்பிள்ளை அருளம்பலத்திற்கும், மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு C 243|92.

4. ஷையிறை "தில்லைவயல்" பர. நில. இலா. பத்தும், (ப. நி. இ. 10) வீடுகளும், பயிர்வகைகளும், கிணறும். எல்லை: கிழக்கு — வாய்க்கால். வடக்கு — கதிர்காமர் ஆறுமுகத்தின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். மேற்கு — றோட்டு. தெற்கு — கதிர்காமர் ஆறுமுகத்தின் உரிமைக்காரர்களுக்கும், மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் $\frac{13}{14}$ பாகம். இதன்பதிவு C298|187.

5. ஷையிறை "காத்தங்காவயலும், நெடுங்குளமும்" பர. நெ. இலா. பத்து. எல்லை: கிழக்கு — சிவகுரு வேலுப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு — நாகமுத்து கதிரவேலுவுக்கும், முருகேசு பொன்னையாவிற்குமுரிய ஆதனங்கள். மேற்கு — கணபதிப்பிள்ளை பெண் தெய்வானையின் உரிமைக்காரர்கட்கும், சிதம்பரப்பிள்ளை நவரெத்தினத்திற்குமுரிய ஆதனங்கள். தெற்கு — மயில்வாகனம் பெண் சோதிக்குரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு C 298|188.

காரைநகர், 1961-ம் ஆண்டு மாசிமீ 10-ம் திகதி.

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொம்மிஷனர்.

---

### நன்றியறிதல்

பரிசுத்த சதாசகாயமாதாவே! உம்முடையவும், அர்ச். யூதா ததேயுவுடையவும் வேண்டுதலால், நானடைந்த பேருதவியின் பிரகாரம் இவர்களின் நாமம் பரிசுத்தப்படும்படியாக இதைப் பிரசுரிக்கின்றேன். காலதாமதமானதற்கு என் இதயம் நொந்து மன்னிப்பு வேண்டுகிறேன்.

தாண்டவன்வெளி. ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரது வானொலி அறிக்கையின் எதிரொலிகள்

## உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள்

"தமிழ்ப்பேசும் மக்கள் தற்பொழுது நடத்தும் போராட்டம் கட்சிபேதமற்ற இயக்கமாகும். அது தமிழ்ப்பேசும்மக்கள் தொடர்ந்து சுதந்திரமாய் வாழ்வதற்கு நடாத்தப்படும் தேசிய போராட்டமென்று கூறப்படின் மிகையாகாது. பாராளுமன்றத்தின் தமிழ்ப்பேசும் பிரதிநிதிகள் அனைவரும் கட்சிபேதமின்றித் தமிழ்ப்பேசும் மக்களின் இவ்வுரிமைப் போராட்டத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றனர்" என்று யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிறெட் துரையப்பா குறிப்பிட்டார். இன்னும் அவர் தொடர்ந்து கூறியதாவது: "பிரதமர் அவர்கள் லண்டனுக்குப் புறப்படுமுன் விடுத்த அறிக்கை சந்தர்ப்பத்துக்கேற்றதன்று. தமிழ்ப்பேசும் மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஓர் சமரசமுடிவை ஏற்படுத்த மனமுண்டென்பதற்குத்தகுந்த அறிகுறி காணப்படவில்லை. எவ்வித தாமதமுமின்றி ஒரு சமரசமுடிவைக் காணும்பொருட்டுப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி அரசாங்கத்தின் பதில்தலைவரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்."

## பிரதமருக்கு இரு யோசனைகள்

மட்டக்களப்புத் தொகுதி இரண்டாவது எம். பி. அல்ஹாஜ் ஏ. எச். மாக்கான் மரக்கார் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்: தமிழ்பேசும் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்குப் பலமான செல்வாக்கு இருப்பதை எவரும் மறுக்கமாட்டார். அக்கட்சி ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரக இயக்கத்தில் அதனை எதிர்த்த சக்திகளும் சேர்ந்து பங்குபற்றுகின்றன என்ற உண்மையையும் எவரும் புறக்கணிக்க முடியாது.

தமிழருடைய கோரிக்கைகளுக்கு நிரந்தரமான பரிகாரம் காண நாம் தவறியதால்தான் இன்றைய இக்கட்டான நிலை எழுந்துள்ளது. இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தினால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்துவிட்டது; நிலைமையைச் சமாளிக்கப் பொலிசாரும், இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பொலிசாரின் பலாத்காரத்தின் விளைவாகச் சத்தியாக்கிரக இயக்கம் பலமடைந்து வீறுபெற்றிருக்கிறது.

பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் சட்டம் இயற்றப்பட்டால் அச்சட்டம் எவ்வகையிலும் அமுலாக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால், காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காகூட மனிதாபிமானப் பிரச்சினைகளில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்தார். பேச்சு வார்த்தைகள்மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்தார். பலாத்காரத்தின்மூலம் தன் கொள்கையை அமுலாக்க அவர் விரும்பவில்லை.

### வட்டமேசை மகாநாடு கூட்டுக

இங்கிலையில் வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுவதன் அவசியம் தெளிவாகின்றது. சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கூட்டிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதால் வேறுபாடுகளைத் தீர்ப்பதோடு, எல்லாரும் இணங்கக்கூடிய ஒரு பொதுவான பரிகாரத்தைக் காண வழி பிறக்கும். இந்த யோசனையை நிராகரிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

பின்வரும் இரு யோசனைகளையும் தங்களுடைய பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அவையாவன:

(1) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழுக்குப் பிரதேச அந்தஸ்து அளித்தல்.

(2) நாடு முழுவதும் பிரதேச சபைகள் அமைத்தல்.

## இழந்த உரிமையைப் பெறும் போராட்டம்

### தளர்த்தப்பட மாட்டாது!

#### தமிழரசுக்கட்சித் தலைவரின் அறிக்கை

**"எமது அஹிம்சைப் போராட்டத்தால் அரசாங்கம் பாதிக்கப்படவில்லை, வடகிழக்கு மாகாண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று பிரதமர் தனது வானொலிப் பேச்சில் கூறினார். இது அவரது அனுபவமின்மையைக் காட்டுகிறது. இப்பகுதி மக்கள் எதிர்பார்ப்பது தங்கள் மொழி உரிமையைத்தான். இழந்த உரிமையை மீண்டும் பெறும்வரை போராட்டம் அணுவளவேனும் தளர்த்தப்படமாட்டாது."**

"இதனை இதுவரை உணராவிட்டாலும் இனியாதல் உணரட்டும். உரிமைகளைக் கொடுத்தாலன்றி அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்த முடியாது என்பதைப் பிரதமர் இன்னமும் உணராதிருக்கிறாரே என்பதுதான் வேடிக்கை."

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தினகரனுக்கு விடுத்த அறிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

சாம்ராஜ்ய மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டன் செல்லும் பிரதமரின் வானொலிப் பேச்சு அவரின் அரசியல் அனுபவக் குறைவை மட்டுமன்றி அவரின் அரசியல் அதிகார இறுமாப்பையுமே எடுத்துக் காட்டுகிறது.

—(:)—

## லண்டன் செல்லுமுன் பிரதமர் விடுத்த அறிக்கை

**பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா லண்டனுக்குப் புறப்படுமுன் விடுத்த வானொலி அறிக்கையில், மொழிப்பிரச்சினையைத் தமிழரசுக்கட்சி தூரதிருஷ்டியுடன் கவனித்துச் சத்தியாக்கிரக இயக்கத்தைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.**

"அரசகரும மொழிச்சட்டத்தின் விளைவாகத் தமிழ் மக்கள் ஏதாவது வசதியீனம், கஷ்டம் இருப்பதாகக் கண்டால் நான் லண்டனிலிருந்து திரும்பியதும் அவற்றைக் கவனிக்கத் தயாராயிருப்பேன். சத்தியாக்கிரக இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தால் எத்தகைய பேச்சுவார்த்தையும் கிடையாது என்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்" என்றும் பிரதமர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# உள்நாட்டுச் செய்திகள்

### அரசாங்க ஊழியருக்கு எச்சரிக்கை

சத்தியாக்கிரகத்தைச் சாட்டாகக் கொண்டு வேலைசெய்யமறுக்கும் அரசாங்கஊழியர்களை எச்சரித்து வேலைநீக்கம்செய்யும்படி அரசாங்கஅதிபர்களுக்குத் தற்போது உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்புப் புதிய அரசாங்கஅதிபர் இந்தஎச்சரிக்கையை அரசாங்க ஊழியர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றார்.

### குற்றமான செயலாகும்

ஐந்துரூபா, பத்துரூபா முதலாம் நாணயநோட்டுகளிலே திருத்தஞ்செய்வதும், எந்தவிதமான ஒருமுத்திரையைப் பதிப்பதும் நாணயச்சட்டப்படி குற்றமாகுமென்று மத்தியவங்கி பிரசித்தஞ்செய்திருக்கிறது. நாணயச்சபையின் அதிகாரமில்லாது எவருமே எந்தநோட்டையும் வெட்டினால், அதிலுள்ள எழுத்தை அழித்தால் அல்லது சிதைத்தால், அதன்மேல் அச்சிட்டால், முத்திரைபதித்தால், எழுதினால், விளம்பரரூபத்தில் எதையாவது ஒட்டினால் அவர்கள் குற்றவாளிகளாவர்.

### இரண்டாவது ஞானவொடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே தபசுகாலத்தின் முதலாவது ஞானவொடுக்கம் சென்ற 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. வண. ஜேக்கப் பெர்னாண்டோ சுவாமியவர்கள் போதகஞ்செய்து வருகின்றார். இந்தஞானவொடுக்கம் வருகிற 12-ந் திகதி காலை முடிவடைந்ததும் இரண்டாவது ஞானவொடுக்கம் அன்றுதினமே பிற்பகல் 6மணிக்குச் சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலில் ஆரம்பமாகி அடுத்த 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முடிவாகும். வண. எஸ். பீற்றர் சுவாமியவர்கள் போதகராயிருப்பார்.

### பூரண சிங்களமொழித் திருப்பம்

"சிங்களமொழிக்குச் சகலத்தையும் பூரணமாகத்திருப்புவது அரசாங்கத்தால் பலவந்தமாகத் திணிக்கப்படுமென்று நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வானொலிமூலம் தெரிவித்திருக்கின்றார்; ஆனால், இலங்கையிலே தமிழ்பேசும்மக்கள் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளில் அப்படியான ஒருகாரியம்நடக்கத் தமிழ்பேசும்மக்கள் ஒருபோதுமே அனுமதிக்கமாட்டார்களென்று நிதிமந்திரிக்கு நான் சொல்லவிரும்புகிறேன்" என்று பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அவர்கள் அன்று பேசியபோது தெரிவித்திருக்கின்றார்.

### அரசாங்க அதிபர்கள் நியமனம்

அனுராதபுர அரசாங்க அதிபராய் இருந்துவந்த திரு. நிசங்கா விஜயரத்தின யாழ்ப்பாண தற்காலிக அரசாங்க அதிபராக நியமனஞ்செய்யப்பெற்றுக் கடமையாற்றி வருகிறார். சொற்பநேர அறிவித்தலிலே இடமாற்றம் செய்யப்பட்டுள்ள மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. பி. ஆர். தேவராஜன் அவர்களிடமாய்த் திரு. டாக்ளஸ் லீயனகே நியமனஞ்செய்யப்பட்டுச் சென்ற வெள்ளிக்கிழமைமுதல் கடமை பார்த்துவருகின்றனர்.

### தலைமன்னார்க் கப்பற்சேவை

தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்குமிடையே கடந்த 47 வருடங்களாக நடைபெற்றுவருவதும், 1946-ம்ஆண்டு முதல் கடந்த பதினான்கு வருடங்களாக வருடந்தோறும் சராசரியாக மூன்று இலட்சம்ரூபா நஷ்டத்தில் நடைபெறுவதுமான இலங்கை- இந்திய கடற்சேவையை நிறுத்துவது பற்றி இந்திய அரசாங்கம் விரைவிலே முடிவுசெய்யுமெனத் தெரியவருகிறது. "அரசியற் காரணங்க"ளால் இருநாடுகளுக்குமிடையே பிரயாணிகள், சாமான்களின் போக்குவரத்து குறைந்துவந்துள்ளதென்றும் சொல்லப்படுகிறது.

### மூன்றுகோடிரூபா செலவாகும்

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்ச்சித்திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டுவர அரசாங்கத்துக்கு மூன்றுகோடிரூபா செலவேற்படுமென்று சம்பளக்கமிஷன் மதிப்பிட்டுள்ளது. அரசாங்கசேவையிலுள்ள பயிற்சிபெறாத 45,000 ஊழியர்களின் சம்பள உயர்ச்சிக்கே இப்பணத்தில் பெரும்பகுதி செலவிடப்படுமெனத் தெரியவருகிறது.

### மாத்தளை உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் மாத்தளைத்தொகுதி ஸ்தானத்திற்கு மூன்றுகட்சிகளின் அபேட்சகர்களாக மூவர்வெளிகொண்டு சென்ற புதன்கிழமை மாத்தளைக்கச்சேரியிலே தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களில் திரு. அலிக் அலுவிகாரை ஐக்கியதேசியக் கட்சியின்சார்பாகவும், திரு. ரி.டி. குணரத்ன சுதந்திரக்கட்சியின் சார்பாகவும், திரு. டாக்ளஸ் சேனநாயக்கா ஐக்கிய இலங்கைக்கட்சியின் சார்பாகவும் போட்டியிடுகின்றனர். மாத்தளை உபதேர்தலும், குருநாகல், இரத்கமை உபதேர்தல்களும் இம்மாதம் 29-ந்திகதி புதன்கிழமை நடந்தேறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஓ. | ஒருசந்தி நாள் |

### பங்குனி மாதம்—1961

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞா. | 1 தபசுகால 4-ம் ஞாயிறு (வி. ம) | [ஊ] |
| 13 | தி. | காலதினம் | [ஊ] |
| 14 | செ. | காலதினம் | [ஊ] |
| 15 | பு. | காலதினம் | [ஊ] |
| 16 | வி. | காலதினம் | [ஊ] |
| 17 | வெ. | காலதினம் (அர்ச். பத்திரிசியார் ஞா.) | [ஊ] |
| 18 | ச. | காலதினம் (அர்ச். சிறிலப்பர் ஞா.) | [ஊ] |

சத்திய வேத
பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
பங்குனிமாதம் 9-ந் திகதி

## மொழியுரிமைப் போராட்டம்

தன்னைச்சூழவர மலையே போன்று அக்கினி சுவாலைவிட்டு எரிந்தபோதிலும் மாசுணம் அதாவதுமலைப்பாம்பு அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருக்குமாம். அவ்விதமே இன்றைய நமது அரசாங்கமும் தன்னைச்சூழ்ந்து கொண்டிருக்கும் அத்தியாவசியக பிரச்சினைகள்மட்டிலே அத்துணைகரிசனை எடுக்கநினையாது கண்மூடித்தனமாய் இருந்துவரக் காண்பது வருந்தத்தக்கதே. ஒருபால் பொருளாதாரவளம் குன்றிக்கொண்டுவர, மறுபால் நிதிநெருக்கடிநிலைமை கதித்துக்கொண்டுவர, இன்னொருபால் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டுவர, பின்னொருபால் வாழ்க்கைச்செலவு கட்டுக்கடங்காமல் வளர்ந்துகொண்டுவர, ஒருபாலார் சம்பளஉயர்வு கேட்டுக்கொண்டுவர, மறுபாலார் வேலைநிறுத்தம்செய்யப்போவதாக விரட்டிக்கொண்டுவர, இவைகாரணமாக அரசாங்கத்தின்பாடு "பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணுதே" யென்ற பரிதாபகரமான— இல்லை, பயங்கரமான நிலையில் இருக்கும்போது—தமிழ்ப்பேசும் மக்கள் மொழியுரிமைப் போராட்டத்தில்—அதாவது காந்திஜி காட்டியவழியிலே அகிம்சாவழிநின்று சாத்வீக சத்தியாக்கிரக போராட்டத்தில் குதித்திருப்பதானது அதற்குப் பரமசங்கடமானநிலையை உண்டுபண்ணியபோதிலும் அது மாசுணம் போன்று இன்னமும் மாதுயில் கொள்வதைக் கவனிக்கும்போது "கேடுவரும்பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்ற சுலோகந்தான் ஞாபகத்தில் வருகின்றது.

இனவிஷயமாகவோ அன்றேல் மதவிஷயமாகவோ சிறுபான்மையினராய் இருந்துவரும்மக்களை வருத்தாமல்வருத்திக் கலக்காமல்கலக்கிப் படுத்தாதபாடெல்லாம் படுத்தி— அவர்கள் மனதைப்புண்படுத்திக் கடைசியாக அடிமைப்படுத்தும்முறையிலே இன்றையஅரசாங்கம் ஒன்றின்பின்னென்றாய்ப் படிப்படியாக நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. உதவிப்பணம் பெற்று உயர்ந்தமுறையிலே இயங்கிவந்த மதஸ்தாபன பாடசாலைகளையெல்லாம் இன்னுமே இன்னதென்று எவருக்குமே தெரியவராத— கல்விமந்திரியுமே அறியவராத தேசீயகல்வித்திட்டமென்ற திரைமறைவிலே பகற்கொள்ளையடித்த பான்மையாய்த் தான் அபகரித்துக்கொண்டதையிட்டு அது தம்பட்டமடிக்கலாம். அரசகருமமொழியாகச் சிங்களத்தை அமூலுக்குக் கொண்டுவந்ததையிட்டும், நீதிமன்றங்களிலே அம்மொழியைக் கொண்டுவந்து புகுத்தியதையிட்டும் அது பெருமையடிக்கலாம். மதவழிபாடுசம்பந்தமாய்ச் சிறுபான்மையினரான மதத்தினரைக் கட்டுப்படுத்தமுனைந்து தான் எடுத்தாண்டிருக்கும் மதவழிபாடுசம்பந்தமான மசோதாவையும் தனது பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு அரங்கேற்றிவிடலாமென்று அது பெருமிதமடையலாம். வானத்தையே வில்லாய் வளைத்து விடத்தானும் அது முனையலாம். ஆனல், "வினை விதைத்தவன் வினையறுப்பான், தினைவிதைத்தவன் தினையறுப்பான்" என்ற சுலோகம் ஒருபோதுமே பொய்த்துவிடப்போவதில்லை. "பிறர்க்கின்னு முற்பகல்செய்யில் தனக்கின்னு பிற்பகல்தானேவரும்" என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கு பொய்க்கப் போவதுமில்லை.

இந்நாட்டின் சுதந்திரபோராட்டத்திலே தமிழ்த்தலைவர்கள் முன்னணியில் நின்றார்கள். ஆனல், தமிழர்கள் இன்று அதே நாட்டில் அடிமைகளாகிவிட்டார்கள். அவர்கள் தங்களதுஉரிமைகள் பறிக்கப்பட்டு இழிவான ஒருநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தன்மானமுள்ள எந்தத்தமிழ்மகனும் இதைச் சகித்துக்கொண்டிருக்கமுடியாது. சிங்களம்மட்டும் சட்டம் இருக்கும்வரை தமிழ்மக்கள் தங்களை ஒருசுதந்திரசமூகமாக ஒருபோதுமே கருதமுடியாது. இன்றைய சிங்கள அரசாங்கம் சிங்களவருக்கே சுதந்திரம்கிடைத்தாற்போன்று தமிழ்மக்களுக்கு இரண்டகஞ்செய்து அவர்களின் மொழிஉரிமைக்குமே உலைவைத்துவிட்டது. அவர்களும் தங்கள் உரிமைகளை எதுவிதமும்பெற்றுவிடுமாறு தண்டுமிண்டில்லாது சமரசப்பேச்சுகள்மூலம் ஆனதெல்லாம் செய்துபார்த்தார்கள். சிங்களம்மட்டும்சட்டம் இருக்கும்வரை — தமிழ்ப்பேசும் மக்களின்மீது சிங்களத்தைத் திணிக்க அரசாங்கம் முயன்றுகொண்டிருக்கும்வரை சமரசமென்பதும், சமத்துவமென்பதும் பகற்[...] மென்பதை [...]மையாலே சண்டமாருதம் போன்று அவர்களின்உணர்ச்சிவேகம் அணைகடந்துவிட்டது. இனிமேல் இருந்தென்ன, இறந்தென்ன, எதுவரினும் வரட்டுமென்ற மனேநிலை ஏற்பட்டுச் சீவமரணப்போராட்டம் ஒன்றில் ஆயுதம் தாங்காது, தமிழர்கள், முஸ்லீம்களென்ற பேதங்காட்டாது சாத்வீகசத்தியாக்கிரக அறப்போரில் இறங்கியுள்ளார்கள். தாங்கள் இழந்த உரிமைகளைப் போராடித்தான் பெறவேண்டுமென அவர்கள் தொடங்கியுள்ள அறப்போர் நாளுக்குநாள் வலுப்பெற்றுவருகின்றது. அவர்களின் இந்த உரிமைப்போராட்டத்தை நசுக்க எந்தச்சக்தியாலும் இனிமேல் முடியும்போல் இல்லை. அவர்களின் சுதந்திரதாகத்தையும், உரிமைவேட்கையையும் குண்டாந்தடிகளாலோ, துப்பாக்கிக் குண்டுகளாலோ அடக்கிவிடலாமென்று ஆட்சிப்பீடம்கினைக்கு[...]த்த கிளியின் [...] முடியுமென்க.

# உண்மையைக் கடைப்பிடி

## மகாவந். தோமாஸ் பர்ஞந்து ஆண்டகை (தூத்துக்குடி) அவர்களின்

## தபசுகால நிருபம்

மனுக்குலத்தைப் பாவத்தினின்று மீட்டு மோட்ச பேரின்பத்தை மக்களுக்கு அளிப்பதற்காகப் பரிசுத்த தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தேவசுதன் இப்புவியில் மனிதனானர். அந்த மனிதாவதாரப் பரம இரகசியத்தை, "வார்த்தையானவர் மாம்சமாகி, இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார்" (அரு. 1:14). என்று அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்தின் தொடக்கத்தில் சுருங்கச்சொல்லி விளக்கியிருக்கிறார்.

இந்தச் சொற்களைத் தினமும் மும்முறை திரிகாலச் செபத்தில் சொல்லி, கடவுளின் அன்புப் பெருக்கை நினைவுகூர்ந்து நாம் செபிக்கிறேம். அதே அழகிய வாக்கியத்தை மேற்கோளாகக் கொண்டு, பரிசுத்த பிதா 23-ம் அருளப்பர் கடந்த டிசம்பர் மாதம் கர்த்தர் பிறப்பு விழாவின்போது உலக மக்கள் அனைவருக்கும் சிறந்த அறிவுரை நிகழ்த்தியுள்ளார்.

உண்மையைப் போற்றுவதும், அதை நினைப்பதும உரைப்பதும் செய்வதும் மக்களின் நல்வாழ்வுக்கு அவசியம்என்பதைப் பரிசுத்தபிதாவலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

நம் தந்தையின் இவ்வறிவுரையை ஏற்று, உண்மையைக் கடைப்பிடிப்பதில் கிறிஸ்துவர்கள் முன்னணியிலும் முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஏனென்றால், இவ்வுலகத்திலே வருகிற எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி யேசுக்கிறிஸ்துநாதர். அவரால் அருளும் உண்மையும் உண்டாயிற்று. நாம் எல்லோரும் அவருடைய சம்பூரணத்திலிருந்து அருளுக்குமேல் அருளைப் பெற்றுக்கொண்டோம் (அரு. 1:9, 17, 16).

சர்வேசுரனை ஒருவனும் ஒருபோதும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஏக சுதனே அவரை வெளிப்படுத்தினர் (அரு. 1:18). மனிதாவதாரம் எடுத்த அத்தேவசுதன், கடவுளை ஐயந்திரிபற அறியும்அறிவை நமக்கு அளித்ததுமட்டுமல்ல, தம்மைப்பற்றிய உண்மையையும் அவரேவெளிப்படுத்தினர். அதாவது மனுக்குலமீட்புக்காகப் பிதாவினுல் உலகில் அனுப்பப்பட்ட தேவகுமாரன் தாமேஎன்று சொல்லாலும், புதுமைகளாலும் வெளிப்படுத்தினர் (அரு. 10: 24—28). அவரை ஏற்று அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களுக்குத் தேவபுத்திரர்களாகும் வல்லமையை அவர் அளிக்கிறார் (அரு. 1, 12). ஆகவே, விசுவாச ஒளியும், அருள்வாழ்வும், அன்பு ஆட்சியும்கொண்ட அவரது இராச்சியத்தைச் சேர்ந்தநாம் ஒளியின் மக்களாக இருக்கிறேம் (I தெ. 5, 5). யேசுக்கிறீஸ்துநாதர் சத்தியசொரூபி, உலகின்ஒளி (அரு. 7, 7). பாவஇருள்படர்ந்த உலகின் தலைவனுகை (அரு. 12, 31) ஆதிக்கம்செலுத்துகிற பசாசு, கிறீஸ்துநாதர் கூறினபடி, "பொய்யனும் பொய்யின் அப்பனுமாக" இருக்கிறான் (அரு. 8: 44). "பாவத்தைச் செய்கிறவன் பசாசின் மகனுக இருக்கிறான்" (I அரு. 3: 8). ஆதலால், பாவத்தையும், பசாசின் ஆதிக்கத்தையும் அழிக்கவந்த கிறீஸ்துவைப் பின்பற்றுகிறநாம் அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல், "இருளின் கிரியைகளைத் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்வோமாக. பகலில் நடப்பதுபோல யோக்கியசாலிகளாய் நடப்போமாக" (ரோ. 13: 12, 13). யோக்கியமான வாழ்க்கைக்கு முதன்முதல் தேவைப்படுவது உண்மையை அறிந்து அதைக் கடைப்பிடிப்பதாகும். இதனல் கிறீஸ்துவின் ஒளியைப்பரப்பும் விளக்குகளாக நாம் விளங்குவோம்.

அப்படியானல், நம்நடத்தை ஒளி பொருந்தியதாக இருக்கிறதா? பொய்யும், புரட்டும், சூழ்ச்சியும், சதியும் மலிந்த இவ்வுலகில் நமது வாழ்க்கை உண்மையும் நேர்மையும்கொண்டு விளங்குகிறதாஎன்று எதார்த்தமனதுடன் ஒவ்வொருவரும் தங்கள்நடத்தையைச்சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். ஆண்டுதோறும் வருகின்ற தபசுகாலம் குற்றம்குறைகளைக்களைந்து, வாழ்க்கையைச்சீர்ப்படுத்த ஏற்றகாலம். எப்போதுமே பாவத்தைவிலக்கிப் புண்ணியத்தைச் செய்ய வேண்டுமென்றாலும், செபதபமுயற்சிகள் சிறப்பாகச் செய்யப்படும் தபசுகாலம் புண்ணியபயிற்சிக்குத் தகுந்தகாலமாக இருக்கிறது. இந்நாட்களை வீணுக்காமல், வாழ்வு புனிதப்படுவதற்குத் தக்க தீர்மானம் எடுத்துக்கொண்டு எல்லோரும் அதைச் செயல்படுத்த முயலவேண்டும். கடவுளின் விசேஷ அருளுதவி குறைவின்றிக் கிடைக்கும்.

பரிசுத்தபாப்பு உரைத்ததுபோல், "அருளும், உண்மையும் நிறைந்தவரான கிறீஸ்துவின்ஒளியில், பிறருடன் எப்போதும் உண்மையேபேசி, உண்மையுடன் நடந்துகொள்வதற்கு அழைப்பு எவ்வளவு அருமையானது! அதுபோலவே 'உன் பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக' (யாத். 20: 16) என்றதெய்வகட்டளையும் எவ்வளவுகண்டிப்பானது."

### பொய் வாழ்வு

நீதிமன்றத்தில் மட்டுமல்ல, மக்கள் மத்தியிலுங்கூடப் பிறருடைய நற்பெயருக்கோ, வேறுநலனுக்கோ பங்கம்அல்லது நஷ்டம்விளைவிக்கக்கூடிய பொய் எதுவும் சொல்லக்கூடாது. இக்கட்டளைக்குமாறான பொய்ச்சாட்சியங்களும், புறணிப்பேச்சுகளும் எத்தனை, எத்தனை! பிறர் நன்றாய்இருப்பதை அல்லது முன்னேறுவதைக் காணச்சகியாத காய்மகாரத்தால் இப்படிச்செய்வது எவ்வளவு கீழ்த்தரமான செயல்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில்......"

**ஒரு மனிதனின் நிலையற்ற வாழ்க்கையோட்டத்திலே குற்றம் என்பது ஓர் தடைகட்டைபோல் தோன்றினாலும், அது அவனது முன்னேற்றத்திற்கு உதவியாய் அமைகின்றது. ஆனால், அவன் அதை ஒப்புக்கொண்டிருந்த முயற்சிக்காவிடின், குற்றமென்பது அவனது வாழ்வைச் சிதைவுபடுத்தி விடுகின்றது.**

கதிரவன் செந்நிறமாகச் சிவந்து வரவரப் பெரிதாக உருவாகி அடிவானத்தை நோக்கி அமிழ்ந்திக்கொண்டே இருந்தான். மங்கிய இருளிலே பேரிரைச்சலுடன் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து மோதிக்கொண்டிருந்த கடலலைகளின் நாதம் என்னைத் தூக்கத்தில் ஆழ்த்துவதுபோல் இருந்தது. இப்படி இருக்கையிலே "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில்..." என்று யாரோ படிப்பதுபோற் கேட்டது. அது ஒருவருமல்ல, எம வீட்டில் இருந்த வானொலிப் பெட்டிதான். அலைகளின் இரைச்சல் பாட்டைக்குழப்பவே நான் சற்று எழுந்து வானொலிப்பெட்டி அருகே சென்றேன் அத்துடன் நில்லாது "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் ..." என்று தொடங்கிய அவ்வழகியபாட்டு எப்படி முடிவுபெறும் என்ற ஆவல் என்னை அங்கு இருக்க விடவில்லை. என்னவோ அதிர்ஷ்டம்தான். அந்தவானொலி திரும்பவும அப்பல்லவியைப் பாடியது. "குற்றம்புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது"— இதைக் கேட்டதும் எனது உள்ளத்திலே ஒருவிததுடிப்பு ஏற்பட்டது. அதுமட்டுமா? எத்தனையோ நூற்றுக்கணக்கானவருடங்கள் கடந்து சென்றனவே; அவைகளையெல்லாம் தாண்டிச்சென்று மோதின எனது விருத்தியடையாச் சிந்தனை அலைகள், குற்றம்புரிந்தவனின் வாழ்க்கையில் நிம்மதி கிடையாதா? சறுக்கிய அவனது வாழ்வு வளம்பெற முடியாதா? என்னும் கேள்விகள் என்னை மென்மேலும் சிந்திக்கச்செய்தன. ஈற்றிலே எப்படியோ தெரியாது, யேசுநாதரின் சீவிய வரலாற்றிற்குள்ளே புகுந்துவிட்டேன். குற்றம் புரியும் பலமற்ற மானிடனின் வாழ்க்கையின்தேற்றரவாக, குற்றவாளியாக மரத்திலே தொங்கி உயிர்விட்ட அந்த வாழ்விக்கும் வள்ளலின் எழில்மிக்க வரலாற்றிலே எத்தனையோ குற்றவாளிகள் தென்படுகின்றனரே; அவர்களது வாழ்க்கையெல்லாம் நிம்மதியற்றதுதானா? என்று ஆராய முற்பட்ட எனது வல்லமையற்ற சிந்தனை யேசுநாதரிடம்மன்னிப்புப்பெற்ற பாவியான ஸ்திரியினுடைய சம்பவத்தைச் சித்திரிக்க முற்பட்டுவிட்டது.

அன்றொருநாள் காலத்தையுங்கடக்கும் கவிலைய நன்றுடன் நதியோரமாகப் பிரசங்கித்துக்கொண்டு சென்றார். பரிசேயரில் ஒருவன் அவரை விருந்துண்ண அழைக்கவே, அவர் அங்கு சென்றார். அவன வீட்டில் நம் யேசு இருக்கையில, அதோ பாவியென்று எல்லோராலும் அழைக்கப்பட்டவள், குற்றத்திற்குமேல் குற்றங்களைப் புரிந்தவள் அங்கு தென்பட்டாள். நாணியதலையுடன் கறைபிடித்த உள்ளம் களங்கமற்ற அந்த உள்ளத்தை நோக்கி நெருங்கியது. அவரை விருந்துக்கழைத்த பரிசேயன் கூச்சமடைந்து விலகிச்சென்று என்னதான் நடக்கப்போகிறதோவென்று ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான். யேசுவுடன்பந்தியமர்ந்திருந்தவர்களும் அப்படியே இந்த நாடகத்தைப்பார்த்து மலைத்துப்போய் நின்றனர். இவர் தீர்க்கதரிசியாய் இருந்தால் தன்னைத் தொடுபவள் யாரென்று அறியமாட்டாரா? இந்தப் பயங்கரகேள்வி எல்லோருடைய கல்நெஞ்சத்திலும் வந்து அடித்து எதிரொலித்தது. அவர்களுடைய உள்ளக்கிடக்கைகளெல்லாம் முகங்களிலே தென்பட்டன. ஆனால், அனல்பொங்கும் அந்த அன்புஉள்ளம் அந்தப் பாவியை ஏறெடுத்துப்பார்த்துக்கொண்டே இருந்தது. அவரை நெருங்கிய அந்தஸ்திரி யேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து தன் குற்றங்களை எல்லாம் எண்ணி அலறினாள். தன்னருகிலே உட்கார்ந்திருந்த அந்த அன்பு ததும்பும் சிருட்டிகருக்கெதிராகச் செய்த தன் குற்றங்களெல்லாம் அழியாச் சித்திரங்கள்போல் தன்முன்னே நிற்பதைக் கண்ணுற்றாள். ஏக்கமடைந்த அந்தப் பாவியின் உள்ளம் கனலாய்த் துடி துடித்தது. பரிகாரம் செய்ய முடியாது பரிதவித்தது அவர் பாதத்திலே புரண்டு அழுதாள்; பெருக்கெடுத்தோடிய தன் கண்ணீர்களால் அவர் பாதங்களைக் கழுவினாள். தனது கூந்தலாற் துடைத்தாள். ஈற்றிலே தான் கொண்டுவந்த வாசனைபொங்கிய பரிமள வர்க்கங்களையெல்லாம் அவர் பாதத்திலே ஊற்றினாள். இத்தகைய அளவுகடந்த மனஸ்தாபத்திற்குப் பிரதியுபகாரம் என்ன? ஒன்றுதான் தேவை. ஒன்றுதான் பிரதானம் — மன்னிப்பு. 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' என்பார்கள். பாவியின்கண்ணீர் அந்தப்பரமதேவனை — இரக்கத்தின் பெருக்கைச் சும்மா விட்டதா? இதோ அந்த அந்தரித்த பாவிக்கு, புறக்கணிக்கப்பட்ட பெண்ணுக்கு ஓர் ஆறுதலான வார்த்தை. சரித்திரத்திலேயே கேட்டிராத ஒரு வசனம். இரட்சணியத்தை உறுதிப்படுத்துமோர் பொன்மொழி. யேசுநாதர் தமது பகிரங்க சீவியத்திலே இரண்டாவது தடவையாக "உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டன" என்று கூறுகிறார். குற்றம் புரிந்த அந்தப் பெண்ணின் வாழ்வு இன்பகரமாக மாறுகிறது. குற்றம் புரிந்தவனின் வாழ்க்கையை விளக்க இன்னும் நாடகங்கள் வேண்டுமா? அதிசயச் சம்பவங்கள் தேவையா? வேண்டுமானால் இதோ இன்னுமொன்று.

யேசுநாதர் தமது பிரிய சீஷர்களுக்குத் தாம் படப்போகும் பாடுகளையெல்லாம் எடுத்துக்கூறியிருந்தார். அதுமட்டுமல்லாமல் தம்மைக்காட்டிக் கொடுப்பவனும், தம்மை மறுதலிப்பவனும் சீஷர்கள் மத்தியிலேயே இருக்கிறான்என்பதையும் முன்னறிவித்தார். இருந்தும் நடந்ததென்ன? யூதாஸ் கன்னத்திலே முத்தமிட்டான். எசமானே என்று கட்டித்தழுவினான் — காட்டிக்கொடுத்தான். முப்பது வெள்ளிக்காசுக்காகச் சர்வ வல்லப கடவுளை — தன்னையும், அந்த வெள்ளிக்காசையும் படைத்த கடவுளைக் காசுக்கு அடைவுவைத்தான். யூதாஸ் காட்டிக் கொடுக்கவே, சேவகர் யேசுநாதரைப் பிடித்துச்சென்று குற்றவாளியாகச் சாட்டிப் பிலாத்துமுன் விட்டனர். வெளிப்புறத்திலே இதோ யேசுநாதரின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகின்றது. இராயப்பர், திருச்சபையின் அஸ்திவாரக்கல்லாக அமையவேண்டியவர், மூன்றுவருடகாலமாக யேசுநாதரின் அன்புச்சீடனாய் இருந்தவர், யேசுநாதரின் அழைத்தலுக்கிணங்கி நீரின்மேல் நடந்துசென்றவர் யேசுநாதரை மறுதலிக்கின்றார். தலையின் மேற் கையை வைத்து நான் அவரை அறியமாட்டேன் என்று ஆணையிடுகிறார். இதுதானா அன்பிற்குக் கைம்மாறு? ஈற்றிலே யூதாசின் கதியென்ன? இராயப்பரின் கதியென்ன? இராயப்பர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அடுத்த தடவையாக யேசுநாதரின் அன்புமலர்ந்த முகத்தைக் கண்ணுற்றதும் துக்கம்மேலிட்டு அழுதார், அலறினார், மன்னிப்புக் கேட்டார். யேசுநாதர் தம்குற்றத்தை மன்னிப்பாரென்ற உறுதியோடு மனஸ்தாபப்பட்டார். தம்குற்றத்திற்கு மன்னிப்பையடைந்தார். மறுபக்கத்தில் யூதாசும் மனஸ்தாபப்பட்டான், கண்ணீர் சிந்தினான், முப்பது வெள்ளிக் காசையும் வீசியெறிந்து, குற்றமற்றவரைக் காட்டிக்கொடுத்தேனே என்று கதறிஅழுதான். ஆனால், தனது கொடிய குற்றத்தை யேசுநாதர் மன்னிப்பாரென்பதை அவனாற் சிறிதும் நம்பமுடியவில்லை. இரக்கமுள்ள கடவுளை அரக்கனென்று எண்ணினான். கழுத்திலே கயிற்றை மாட்டினான். அதுதான் அவனது முடிவு.

இப்படியாகப் பாவியின்மன்னிப்பை எடுத்துக்காட்டும் சம்பவங்கள் யேசுவின் புனித வரலாற்றிலே மலிந்து பொலிந்து கிடக்கின்றன. நம்பிக்கையுடன் மனஸ்தாபப்படும் பாவியை மன்னிக்கத் தயாராய்இருக்கிறார் நம்யேசு. இத்தகைய இரக்கமுள்ள கடவுளைச் சிலுவையில் அறைந்தார்கள். இரு குற்றவாளிகள் நடுவிலே தொங்கவிட்டார்கள். அங்குமுதலாய் யேசுநாதர் மனஸ்தாபப்பட்ட குற்றவாளிக்குப் பரலோகத்தைத் திறந்துவிடுகின்றார். "இன்றுதானே நீ என்னுடன் பரலோகத்தை அடைவாய்" என்று கூறுகிறார். அந்த இரக்கத்தின் தேவன் இவைகளையெல்லாம் ஏன் செய்தார்? என்று சிந்திக்கத்தவறாதே மானிடனே! எமது பெலவீனத்தை அறிந்தார். நாம் குற்றத்திற்குமேல் குற்றத்தைக் கட்டிக்கொள்வோம் என்பதை அறியாதவர் அல்ல அவர். நாம் எமது பாவக் கறைகளால் இரட்சணியத்தை அடைய முடியாது என்று தத்தளித்து அதை இழக்க முடியும் என்று அறிந்தபடியாற்றான் சிலுவையிற் தொங்கிக்கொண்டு முதலாய்ப் பாவிக்கு மன்னிப்பளித்தார். நாம் எமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அவரிடம் மன்னிப்புக் கேளாவிடின், குற்றம்நிறைந்த நம் சிறுவாழ்வு நிம்மதிஅடையாது. பாவியான ஸ்திரியின் சம்பவம் எமக்கு ஒரு பாடமாக அமையட்டும். மும்முறைமறுதலித்த இராயப்பரின் சரித்திரம் எமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கட்டும். யேசுவின் அளவுகடந்த பொறுமையும், இரக்கமும்தான் எமது சிதைவுற்ற வாழ்விலே உறுதித்துணை. இத்தகைய வள்ளலின்முன் நம்பிக்கையும், மனஸ்தாபமும் சுடர்விட்டு எரியுமானால், குற்றம் புரிந்தவனே! உனக்கு மன்னிப்புக் கிடைப்பது திண்ணம்.

— ச. தேம்பொன்கலன்

---

இதுமட்டுமா! மக்களிடையே குடும்பங்களில், ஊர்களில் சமாதானத்தைக் குலைக்கத்தேடும் சதிகாரரும் உண்டு. இவர்கள் தங்கள்செல்வாக்கு அல்லது பிழைப்புக்காகப் பிளவுகளை உண்டாக்கத் தயங்காதவர்கள். ஒருவர்சொல்லாததைச் சொன்னதாகவும், செய்யாததைச் செய்ததாகவும் அல்லது அவர் சொன்னதும் செய்ததும் ஒருதன்மையாய் இருக்க வேறுவகையாக அவைகளைத் திரித்துக்கூறும் பாதகப்பேச்சுப் பேசுவார்கள். ஞானமேய்ப்பர்களிடமிருந்து மக்களைப்பிரித்து ஆளுவதற்காகச் சூழ்ச்சிசெய்து பொய்வார்த்தை பேசவும், பொய்ப்பிரசாரம் பண்ணவும் அஞ்சாதவர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். பக்திமட்டுமல்ல, தெய்வபயமும இவர்களிடம்இல்லை. தெருக்களிலும், திண்ணைகளிலும், அந்தரங்கத்திலும், வெளிப்படையாக, சமயசந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் இவ்விதபேச்சுக்களைக் காதில்ஓதியும், பிரசாரமாய் முழங்கியும், சந்தேகங்கள், சண்டைகள், கட்சிக்கலகங்களைத் தூண்டிவிடுகிறார்கள். வெளிக்கு உண்மைஉரைப்பவர்கள்போல் நடிப்பார்கள். ஆனால், உள்ளத்தில் நயவஞ்சகம் நிறைந்தவர்கள். அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல், "சாத்தான்முதலாய்ப் பிரகாசத்தின் தூதனாக வேஷம்போட்டுக் கொள்கிறானே! ஆதலால், அவனுடையவூழியர் நீதியின் ஊழியராக வேஷம்தரித்துக்கொண்டால் அது அதிசயமல்லவே. அவர்களுடைய முடிவு அவர்களுடையசெய்கைகளுக்குத் தக்கதாயிருக்கும்" (II கொரி. 11:14, 15).

இன்னும், பிறன் ஒருவன் வாழ்வைக் கெடுக்கவேண்டும், அவனைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவன் செய்யாதகுற்றங்களைச் சிருஷ்டித்து, செய்தசிறு தவறுதல்களைப் பெரிதாகச் சோடித்துப் புகார்செய்வதும், வழக்குத்தொடுப்பதுமான நீசச்செயல் புரிபவர்கள் இல்லையா? இதற்காகப் பொய்யான கையெழுத்துக்கள் இடவும், பொய்சாட்சிகளைத் திரட்டவும் தயங்குவதில்லை; இப்படிச்செய்தால் "நின்றுகொல்லும்" தெய்வநீதியின் தண்டனைக்கு அஞ்சுவதுமில்லை.

உண்மையைக் கடைப்பிடியாததுடன் பிறருக்குத் தீங்குசெய்யும் இவர்களின் வாழ்வு ஒளியற்றது. தங்கள் சதித்திட்டங்களுக்காக அவர்கள் தேடும்நேரமும் இடமும் இருள்மண்டியதாக இருக்கும். அந்தோ பரிதாபம்! கிறீஸ்தவர்களாய்இருந்தும், அன்பு, மன்னிப்பு, தியாகத்தின் சின்னமாக விளங்கும் சிலுவையின் விரோதிகளாக நடந்து கொள்ளுகிறார்கள். இது எவ்வளவு வருந்தத்தக்கது.

மேலும், எவ்விஷயத்திலும் பொய் விலக்கப்பட்டதே. ஆனால், ஒருவர் ஒருவரைஏமாற்றிப் பொருளீட்டுவதும் கஷ்டநஷ்டங்களைத் தடுப்பதற்காகப் பொய்சொல்வதும் சர்வசாதாரணமாக நிகழும் இவ்வுலகில்வாழ வேறுவழிஏது என்று சிலர் எண்ணுகிறார்கள்; ஆதலால் அம்முறையை ஏற்கிறார்கள். ஆனால், பொய்யை வாழ்வழியாகக் கொள்வது மிகஇழிவானது. கிறீஸ்தவ ஒழுக்கத்திற்கும், பண்பாட்டுக்கும் ஒவ்வாதது. இறுதியில் வாழ்வையே அழிக்கக்கூடியது. ஏனெனில், உண்மைக்கு அழிவில்லை. "பொய்பேசுகிறவன் நாசமாவான்" (பழ. 19:9) என்பது தேவவாக்கு.

(வளரும்)

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்குச் சிலதினங்களுக்குமுன் ஏற்பட்ட தொண்டைநோய் என்னைத் திடுக்கிடச்செய்தது. தொண்டைஅரிப்பு, நோமாத்திரமல்ல, ஒன்றும்சாப்பிட இயலாமலும், தண்ணீர்ப்பதார்த்தங்கள் முதலாய் விழுங்கஇயலாமலும் பெரும்கஷ்டப்பட வேண்டியிருந்தது. முன்னர் எனது கஷ்டங்கள், வருத்தங்களில் பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் உதவியால் நான் சுகமடைந்திருக்கிறேன். இத்தருணத்திலும் அவர்களின் ஞாபகம் வந்து, அவர்களை இரந்துமன்றாடிச் சில மணிநேரத்தின்பின் படிப்படியாய் நோய் குறையத்தொடங்கி ஈற்றில் பூரணகுணமடைந்தேன். இவர்களுக்கு என்றும ஸ்தோத்திரம். அவர்கள்நாமம் புகழப்படுவதாக.

வ. ஞசைப்பிள்ளை
சுண்டிக்குளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பக்கம்

# தொழிலாளரின் உரிமைச் சாசனம்

## 13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

(முன்தொடர்ச்சி)

**1-ம்பாகம்**

### 2. தனிச்சொத்து உரிமை உண்டு

**(ஆ) குடும்ப நிர்வாகத்துக்குத் தனிச்சொத்து அவசியம்:**

தனிமனிதனுக்குரிய தனிச் சுதந்திரங்களைப்பற்றிப் பேசினேம் அல்லவா; அந்தச் சுதந்திரங்களை எல்லாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டுமாயின் மனிதனுடைய குடும்பக் கடமைகளோடு அவற்றை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். ஒரு அந்தஸ்தைத் தெரிந்துகொள்ள ஒவ்வொரு மனிதனுக்கும பூரண சுயாதீனமுண்டு. இதைப்பற்றி ஒருவரும் சந்தேகிப்பதில்லை. ஒருவன் தன் விருப்பப்படி கிறிஸ்துநாதருடைய ஆலோசனைகளுக்கு அமைந்து துறவற அந்தஸ்தை ஏற்றுக்கொள்ளலாம்; அல்லது விவாகபந்தனத்தக்குட்பட்டுக் குடும்ப வாழ்க்கை நடத்தலாம். விவாகஅந்தஸ்துக்குரிய இயல்பான சுதந்திரங்களைத் தடுக்கவோ; அல்லது ஆதியிலிருந்தே "நீங்கள் பலகிப்பெருகுங்கள்" என்று சருவேசுரனல் தீர்மானிக்கப்பட்ட விவாக அந்தஸ்தின் நோக்கத்தை மட்டுப்படுத்தவோ எந்த மனித அதிகாரத்தாலும் முடியாது. குடும்பம் சருவேசுரனல் ஸ்தாபிக்கப்பட்டது; அது ஒரு சிறுசமூகம்; அது அரசாங்கம் ஏற்படுமுன்னரே உண்டான ஒரு சமூகம். இந்த உண்மைகளை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. ஆகவே, அரசாங்கம் தலையிடக்கூடாத தனிச்சுதந்திரங்களும் கடமைகளும் குடும்பத்துக்கு உண்டு.

தனிமனிதனுக்கு இயல்பாகவே சொத்துவைத்திருக்க உரிமை உண்டு என்று பல காரணங்கள் கூறினேம் அல்லவா; அதே சொத்துரிமை, அவன் ஒரு குடும்பத்தலைவன் என்ற காரணத்தாலும அவனுக்கு இருக்க வேண்டுமென்று இங்கு நியாயம் கூறுவோம். ஒருவன் குடும்பத் தலைவன் என்ற காரணத்தால் அவனுடைய கடமைகள் அதிகரிக்கின்றன; அதனல் சொத்து வைத்திருக்கவும் அவனுக்குள்ள சுதந்திரம் அதிகரிக்கின்றது. ஏனெனில், ஒரு தகப்பன் தான்பெற்ற பிள்ளைகளுக்கு உணவு, உடை முதலியவை கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்பது சுபாவப்பிரமாண விதிகளுள் மிகச்சிறந்ததொன்றாகும். பிள்ளைகள் தகப்பனுடைய பெயரை விளங்கச் செய்யப் பிறந்தவர்கள்; அவனுடைய மனித சக்தியை, அது உலகில் மறைந்துபோகாமல், நிலைநாட்டப் பிறந்தவர்கள். ஆகையால், நிலையற்ற இந்த உலகவாழ்க்கையில் அவர்கள் தரித்திரத்திலும் நிர்ப்பாக்கிய ஸ்திதியிலும் விழாதபடி அவர்களுக்கு அவசியமான சகலவற்றையும் கொடுத்து உதவவேண்டியது தகப்பனது கடமை. இவ்விதம் குழந்தைகளைப்பராமரிப்பதற்குச்சொத்துரிமையைத் தவிர அவனுக்குப் பயனளிக்கக்கூடிய வேறுவழி இல்லை. சொத்துரிமை இருந்தாற்ருன் அவன் பிதிராச்சிதமாக ஏதாவது தன்பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லக்கூடும். அரசாங்கத்தைப்போல குடும்பமும் ஒரு சமூகம். குடும்பத்துக்கும் ஒரு தனிப்பட்ட அதிகாரம் உண்டு; அது தகப்பனுடைய அதிகாரம். ஆகையால், குடும்பவாழ்க்கையின் நோக்கப்படி அதற்குரிய வரம்பு மீருமல் நடப்பதாயிருந்தால், குடும்பத்துக்கும் குறைந்தபட்சம் அரசாங்கத்துக்கு இருக்கும் சுதந்திரங்களாவது இருக்க வேண்டும். இச்சுதந்திரங்களினுல் குடும்பம் தன் பிழைப்புக்கு அவசியமான காரியங்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்கேற்ப செயலாற்றவும், நியாயமான தனது சுயாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும்கூடும்.

அரசாங்க சுதந்திரங்களை விட, குடும்ப சுதந்திரம் மனிதனுடைய சுபாவத்தை அதிகமாக ஒட்டியது. பலகுடும்பங்கள் ஒன்றுக்கொன்று உறவு பாராட்டி ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்து அதன்கீழ் வாழும்போது, அந்த அரசாங்கம் அவைகளுக்கு உதவிசெய்வதற்குப் பதிலாகத் தடங்கலாக இருந்தால், அல்லது அவைகளின் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அழிக்கத் தேடினல், அந்த அரசாங்கத்தை விரும்புவதற்குப் பதிலாக எல்லாரும் அதை வெறுப்பார்கள் அல்லவா? வீட்டு நடவடிக்கைகளிலும், குடும்ப நிர்வாகத்திலும் அரசாங்கம் தன்னிஷ்டப்படி தலையிட்டு அதிகாரம் செலுத்தலாமென்று பொதுவுடைமைவாதிகள் கூறுகின்றனர். இது ஆபத்துக்கிடமான ஒரு பெருந் தப்பறை. ஒரு குடும்பம் மிகுந்த கஷ்டநிலையில் இருக்கிறதென்றும், அது தன் கஷ்டநிலையிலிருந்து மீளுவதற்கு அதற்கு ஒரு வகையுமில்லையென்றும் வைத்துக் கொள்ளுவோம். இவ்வித அட்டதரித்திரத்திலுள்ள இந்தக் குடும்பத்துக்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டியது அவசியம். ஏனெனில், இதற்காகவே அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது. இதுபோல, குடும்ப நடவடிக்கைகளில் ஒருவரொருவருக்குரிய உரிமைகளைப்பற்றிப் பெருமசச்சரவு ஏற்படுமாயின் அரசாங்கம் தலையிட்டு அவரவருக்குரிய நியாயமான உரிமைகளை அவரவர் அடையும்படி செய்வது நியாயமே. இவ்விதமான காரியங்களில் அரசாங்கம் தலையிடுவதால் குடிகளின் சுதந்திரங்களை அபகரிப்பதில்லை; அதற்கு மாருக அவைகளைத் தக்கநியாயமான முறையில் பாதுகாக்கின்றது. ஆனல், **இவ்வளவோடு அரசாங்கம் தன் அதிகாரத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்**; எல்லை மீறிப் போகக்கூடாதென்பது இயற்கைநியதி. குடும்பத்தில் தகப்பனுக்குள்ள அதிகாரத்தை அரசாங்கம் அழித்துப்போடவோ, அன்றேல் தானே வகித்துக் கொள்ளவோ முடியாது. ஏனெனில், உயிர்களின் ஆதிகாரணராகிய கடவுளே இந்த அதிகாரத்துக்கும் அஸ்திவாரம். "குழந்தை தகப்பனுக்குச் சொந்தம்;" ஒருவகையில் குழந்தையின் சீவியம் தகப்பனுடைய சீவியத்தை நீடிக்கச் செய்கிறது. குழந்தை வளர்ந்து சனசமூகத்தில் ஒரு இடத்தை வகிப்பது தனிப்பட்டமுறையிலல்ல; சரியாகச் சொல்லப்போனல் தான் பிறந்த குடும்பத்தின் பெயராலேயே சமூகநடவடிக்கைகளில் கலந்துகொள்ளுகிறது. அர்ச். அக்குயீனஸ் தோமையார் கூறுவதுபோல "குழந்தை புத்திவிபரம் அறிவதற்குமுன் தனது பெற்ருேரின் ஆதீனத்திலிருக்கிறது" இதற்கு மாருகப் பொதுவுடைமைவாதிகள் பெற்ருேரைப் புறக்கணித்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக அரசாங்கம் குழந்தைகளைக் கண்காணிக்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். இப்படிச் சொல்வது இயற்கை நியாயத்திற்கு விரோதம்; அன்றியும் குடும்பஸ்தாபனத்தையே தகர்த்துவிடவும் இது வழியாகும்.

பொதுவுடைமை வாதிகள் விரும்புகிறபடி அரசாங்கம் குடும்பவாழ்க்கையில் தலையிடுவது நியாய விரோதம் மட்டுமல்ல, அது குடிகளில் பல வகுப்பினருக்கும் அல்லல் [illegible] உண்டுபண்ணவும் [illegible] தாழமுடியாத, அருவருக்கத்தக்க அடிமைத்தனத்துக்கும் அவர்களை உட்படுத்திவிடும் என்பதற்கும் சந்தேகமில்லை. மேலும், அரசாங்கம் குடும்ப விவகாரங்களில் தலையிடுவதால் குடிகளுக்குள் பொருமையும், அபவாதமும், வேற்றுமையும் தலையெடுக்கும். குடும்பகாரியங்களை அரசாங்கம் நிர்வகிக்க ஆரம்பித்தால் ஒருவரும் தங்கள் திறமையையும் சக்தியையும் செலுத்திக் கருத்தோடு வேலைசெய்யமாட்டார்கள். அதனல் நாட்டில் பொருள் விருத்தியும், பணப்பெருக்கும் தடைப்படும். கடைசியாகப் பொதுவுடைமைவாதிகள் மனோராச்சியம் செய்துகொண்டிருக்கும் **"சமத்துவ அந்தஸ்து"** ஒருபோதும் கைகூடாது.

இங்கு கூறிய காரணங்களால் பொதுவுடைமையின் **"சமூக சொத்து"** என்ற கொள்கை ஒருபோதும் உதவாது. அதனல் நன்மைக்குப் பதிலாகத் தீமைதான் விளையும். இக்கொள்கையைப் பிரஸ்தாபிக்கிறவர்கள் அதனல் தொளிலாளர்களுக்கு இலாபம் உண்டாகுமென்றுதான் நினைக்கிருர்கள்; ஆனல், அது தொழிலாளர்களுக்கே நட்டமாக முடியுமென்பது அவர்களுக்குத் தெரியாது. மேலும், இக்கொள்கை மனிதனுடைய இயல்பான உரிமைகளுக்கும் விரோதமானது. பொதுசன வாழ்க்கையிலும் அது கலகங்கள் குழப்பங்களுக்கு ஏதுவாகும். ஆகையால், **ஏழைமக்களின் கஷ்டநிவாரணத்துக்காக உழைக்க விரும்புகிறவர்கள் முதல் முதல் கருத்தில் வைக்க வேண்டிய அடிப்படையான கொள்கை, பங்கமில்லாமல் அனுபவிக்கப்பட்டுவரும் தனிச் சொத்துரிமையை எல்லாரும் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான்.**

(வளரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. M. B. 2789**

1. நாகலிங்கம் நடராசாவும்
2. பெண் அன்னம்மாவும்

இருவரும் அராலிதெற்கு

— வழக்காளிகள்.

எதிராக

1. செல்லையா சேனுதிராயவும் காலஞ்சென்ற
2. பெண் மார்தத்புரவீக வல்லிஅம்மா இருவரும் அராலிதெற்கு. முதலாம் எதிரி தனக்காகவும், இரண்டாம் எதிரிக்காகவும் சட்டப்படி பிரதிநிதியாகவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2789-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 3 துண்டுக்காணிகளை 1961-ம்ஆண்டு பஙகுனிமீ 23-ந்வ (23-3-61) வியாழக்கிழமை முற்பகல் 9மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,200-ம், இதற்குத்தீர்வை ரூபா 3,000-க்குப் 15-4-59திகதி தொடக்கம் 16-6-59 திகதிவரைக்கும் 100-க்குப் 10வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 342ரூபா 58சதமும.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்மேற்கு (கோயிற்பற்று வட்டுக்கோட்டை) அராலிதெற்குகிளாய் பரப்பு நில. இலாச்சம் நாலும், வீடும், கிணறும், வான்பயிர், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு— கணவதிப்பிள்ளை பெண் அம்பிகைப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — ருேட்டு. தெற்கு — இராமனுதர் பெண் வியாழுப்பிள்ளையின் ஆதனமும், வடக்கு எல்லைக் காணியில் இருக்கின்ற கிணற்றில் $\frac{2}{5}$பங்கும், தூர்வை வழிவாய்க்காலும்.

2. மேற்படி அராலிதெற்கு "அல்லைபுலம்" பரப்பு நில. இலாச்சம் ஐந்தும், வான்பயிர், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — சீனிவாசகம் செல்லப்பாவின் ஆதனம். வடக்கும், மேற்கும் — ஒழுங்கை தெற்கு — விசுவநாதர் கனகசபைக்கும், பெண் செல்லத்திக்கும் உரியஆதனம். இது அடங்கலும்.

3. மேற்படி அராலி தெற்கும், மேற்கும் "இருவியன்புலம்" பரப்பு நெல்லு இலாச்சம் பத்தும், கிணறும். எல்லை: கிழக்கு — கைலாயர் சிவபூசனத்தின் ஆதனம். வடக்கு — கைலாய சிவபூசனத்துக்கும், மருதப்பர் தவசிப்பிள்ளையின் உரிமையாளருக்கும் உரிய ஆதனம். மேற்கு — விஞசித்தம்பி நடராசாவின் உரிமையாளர்க்குரிய ஆதனம். தெற்கு— விஞசித்தம்பி பெண் தங்கமுத்துவின் ஆதனம். இது இடங்கலும்.

**சி. செ. மாரிமுத்து,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

"[illegible]"
சித்தன் கேணி, 9-2-61.

---

செப அப். சபை வெளியீடு

## பங்குனி மாதம்

**பொதுக்கருத்து:** தற்கால முன்னேற்றங்களில் காணப்படும் மாய வலைகளின் மத்தியில் குடும்பங்கள் திருச்சபையின் போதனையாலும், தேவதிரவிய அனுமானங்களை அடிக்கடி பெறுவதாலும் உறுதிப்படுத்தப்படும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** சுதேச குருமார்யாவரும்தற்காலதேவைகளுக்கு ஏற்றவண்ணம் உறுதியான உத்தம பயிற்சிபெறுமாறு மன்ருடிக்கொள்வது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. M. B. 3152**

சுண்டிக்குளி
1. சின்னத்தம்பி சண்முகமும்
2. பெண் நவமணியும்

— வழக்காளிகள்.

எதிராக

சுண்டிக்குளி, ஆஸ்பத்திரிவீதி, நம். 432
1. பஸ்தியாம்பிள்ளை யோசேப்பீற்றரும்
2. பெண் யோசேப்பின் ரேசாத்தினமும்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3152-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1961-ம்ஆண்டு சித்திரைமீ 15-ந்வ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,040-ம் 20-11-59 தொடக்கம், 2-2-60 வரைக்கும் ரூபா 5,000-க்குப் 10வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 290ரூபா 55சதமும். இக் கோட்டுச்செலவில் ரூபா 175கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி பறகுசாடு சுண்டிக்குளிஇறை "மருதன் தறை" நிலப்பரப்புமூன்றும்,(3) குளி பதினான்கும் (14), வீடும், கிணறும், அதைச் சேர்ந்தவைகளும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — சோமசுந்தரம் ஒழுங்கை. வடக்கு — வைரவிப்பிள்ளை சண்முகராசா பெண் கனகாம்பிகைக்குரிய ஆதனம். மேற்கு — ஜெயரெத்தினம் இராசரெத்தினம் பெண் அருள்இராசமலரின் ஆதனம். தெற்கு— செல்லையா கந்தையா பெண் உத்தமிப்பிள்ளையின் ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் D239/138 -ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

**அ. ஜெகநாதன்,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6. 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## சிறுவர் அறிவுச் சக்கரம்—1

அருமைத் தம்பி, தங்கையரே!

இதோ ஒரு புதுஅம்சம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதமொருமுறை வெளியாகும் 'அறிவுச் சக்கரத்'தில் 14 வயதுக்குட்பட்ட எல்லோரும் பங்குபற்றலாம். வருடம் முழுவதும் இடம்பெறும் அறிவுச் சக்கரத்தில் அதிகப்படியாகக் கலந்துகொண்டு முழுதும் சரியானவிடைகளை அனுப்புபவர்களுக்கு வருட இறுதியில் பரிசு வழங்கப்படும். கீழே வரும் முதல் அறிவுச்சக்கரத்துக்கு விடை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

(1) பின்வரும் சின்னங்களால் குறிப்பிடப்படும் அர்ச்சியசிட்டர்கள் யார்?
1. தச்சுத்தொழில் ஆயுதங்கள்
2. யேசுவின் திருமுகம் பதிந்த சீலை
3. X தரவடிவமான சிலுவை
4. திறப்பு
5. அம்பு அல்லது அம்புகள்
6. நாய்
7. கழுகு
8. வீணை

(2) பின்வரும் வினக்களுக்கு விடை தருக.
1. யேசுநாதரின் வலது பக்கத்தில் அறையப்பட்ட கள்வனின் பெயர் என்ன?
2. யேசுநாதர் யாருடைய தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார்?
3. யேசுநாதரைச் சிலுவையில் நின்று இறக்கியவர்கள் யார்?
4. யேசுநாதருடைய திருவிலாவைக்குத்தித்திறந்த போர்ச்சேவகனின் பெயர்என்ன?
5. யேசுநாதருடைய சிலுவையில் அறையப்பட்ட பட்டயத்தில்எழுதப்பட்டதென்ன?

மேற்படிவினக்களுக்கு விடைகளை எழுதி,

ஆசிரியர்,
"சிறுவர் அறிவுச் சக்கரம்"
அர்ச். சூசையப்பர்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

குறிப்பு: பெயர், பிறந்த திகதி குறித்து அனுப்பப்படாத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அண்ணு.

பாலர்பக்கத் தொடர்கதை

## தயாள உள்ளம்

### முன்பாகத்தின் சுருக்கம்:

கிழவரைக் கூட்டிவருவதற்குத் தந்தையாரின் உத்தரவு கிடைத்தவுடன் டேவிட் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். அதுமட்டுமல்ல, அவனது கனவில் கூட அந்த மகிழ்ச்சி பிரதிபலித்தது. அன்றிரவு இன்பக்கனவு கண்டான். வயோதிபர் மேகக்குவியலில் உருண்டு கீழே விழுந்துவிடுவதுபோல் ஒரு காட்சி கண்டு பயந்து அலறிவிட்டான். அலறல் கேட்டு அவனது பெற்ருேர் அவன் படுத்திருந்த அறைக்குள் நுழைவதைக் கண்டு அவனே திகைத்துவிட்டான். அவன் கனவு கண்டு அலறியதுகூட அவனுக்குத் தெரியாது. மிகுதியைத் தொடர்ந்து படியுங்கள்.

வருவான், வருவான் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்த ஏழைக் கிழவர்முன் வந்துநின்றது ஓர் அழகிய மோட்டர்கார்.

"தாத்தா" என்ற அன்பு கலந்ததோர் அழைப்பும், அதைத் தொடர்ந்து டேவிட்டும் அவனைத் தொடர்ந்து சூசைநாதனும் உள்ளேயிருந்து குதித்தனர். அன்னம்மாள் மெதுவாக இறங்கிஞள்.

டேவிட் கிழவரின் கரங்களைப் பற்றி மார்பில் அழுத்திக்கொண்டான்.

"தாத்தா! இவர் எனது அப்பா; அது அம்மா."

"இந்த அருமையான குழந்தையைப் பெற்ற நீங்கள் பாக்கியசாலிகள்!" கிழவர் கரங்கூப்பி வணங்கிஞர்.

கிழவருக்குப் பதில் வணக்கம் கூறிவிட்டுப் "பெரியவரே! நான் உங்கள் பிள்ளையைப்போல; ஒன்றும் பெரிதாக எண்ணவேண்டாம்; இனிமேல் நீங்கள் இங்கே இருக்கவேண்டாம்; என் வீட்டில் என் தந்தையாகவே இருக்கலாம்" என்ருர் சூசைநாதன்.

கிழவருக்கு வாய் திறக்க முடிந்தது; நா அசைந்தது; பேச்சு வெளிவரவில்லை; அளவிலா ஆனந்தம் அவர் தொண்டையை அடைத்துவிட்டது. ஒரு நொடிக்குள் அவர் மனம் எத்தனையோ கல் தொலைவை எட்டிப்பிடித்துவிட்டது.

"ஏறுங்கள் காரில்; மிகுதி எல்லாம் வீட்டில் ......" சூசைநாதன் கைகொடுத்துக் காரில் ஏற்றிஞர். டேவிட்டும், அன்னம்மாளும் அவர் பக்கத்திலே அமர்ந்தனர். "பஞ்சு மெத்தை இப்படித்தான் இருக்குமோ?" என்று அன்றுதான் கிழவர் சிந்தித்தார். தனது இருப்பிடத்தை ஒருமுறை திரும்பிப் பார்ப்பதற்குள் கார் ஒரு திருப்பத்தைக் கடந்துவிட்டது. பின்னுல் திரும்பிப்பார்த்த கிழவருக்குக் கார் கிளப்பிவிட்ட புழுதிமட்டுமே தெரிந்தது. சென்றதை மறந்து, வருவதைச் சிந்திக்க முனைந்துவிட்டார் கிழவர்.

மார்கழி 24; மாலை ஆறு மணி; வானமண்டலத்திலிருந்து ஒருபகுதி உடைந்து விழுந்தது என்றுதான் தோன்றும். சூசைநாதனின் வீடு, வீட்டு முற்றம் யாவும் ஒரே வர்ண விளக்குகள்! 'கிறிஸ்மஸ் மரத்'தைச் சுற்றி வர்ண மின்சார விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன. வீட்டு முற்றத்திலே பௌர்ணமிகால நிலவுபோல ஒரு பெரிய மின்சார விளக்கு ஒளி வீசிக்கொண்டிருந்தது. தேவலோகம் என்றுதான் சொல்லவேண்டும் சூசைநாதனின் வீட்டை. ஆமாம், தேவனது வருகைக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள்தானே அவை!

அதோ! அங்கே நிற்பது யார்? பட்டுக்கரை வேட்டி; தங்கத்தால் வார்த்தெடுத்த கவசம்போல் மின்னும் வழுக்கைத்தலை; வெள்ளிக் கம்பிகளால் நூல்செய்து ஆங்காங்கே ஒட்டிவைத்த குஞ்சம்போல் மின்னும் தலைமயிர்; பொலிஷ் போடப்பட்டுப் பளபளக்கும் அழகான கைப்பிரம்பு; அடடே! நம் டேவிட்டின் உயிர் நண்பரான தாத்தாவா? எவ்வளவு மாறிவிட்டார்! அதோ! அவருக்குப் பக்கத்தில் இருப்பது என்ன? தங்கச் சிலையா? அசைகிறதே! என்ன ஆச்சரியம்! ஓ...பிலோவா? வண்ண விளக்குகளின் மாயாஜால வித்தையிலே அவள் தங்க விக்கிரகமாகவே தோன்றிஞள்.

கிழவர் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தார். அவரது கண்கள் எதிரே நின்றிருந்த 'கிறிஸ்மஸ் மரத்'தையே இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன. எவ்வளவு அழகாகச் செய்திருந்தான் டேவிட்! இன்னும் அதிலேயே வேலையாயிருந்தான். அவனது அற்புதக் கலைத்திறனைப் பார்த்தே கிழவர் வியந்து நின்ருர்போலும். மின்சார வேலைகள்கூடச் செய்கிருனே என்று கூறி வியந்தன அவர் கண்கள். "பனியில் நிற்காதே; வா" என்று டேவிட்டை அழைக்க நினைத்தார். ஆனுல், அவனது ஆசையை ஏன் கெடுப்பான்? என்று பேசாமல் இருந்துவிட்டார்.

"தாத்தா! அண்ணுவின் அறைக்கு வந்து பாரேன், எவ்வளவு அழகாய் இருக்கிறது." தேனிலே சர்க்கரையை நனைத்து நாவில் தடவிக்கொண்டால் உருசி எப்படியோ அப்படியே இனிமையாயிருந்தது அந்த இளங்குரல். அது பிலோவின் குரல்.

"அப்படியா? வா போகலாம்" என்று பிலோவின் கையைப் பிடித்துக்கொண்டு, கைப் பிரம்பையும் ஊன்றிக்கொண்டு மாடிப்படிகளில் ஏறிஞர் கிழவர்.

(தொடரும்)


வெளிவந்துவிட்டது!

பாலர் குறிப்பிடம்

புதிய பதிப்பு

சிறுபிள்ளைகள் ஞானுபதேசத்தை இலகுவாயும், கவர்ச்சிகரமாயும் கற்றுப் பயன் அடையும்படி இந்நூல் சிறுசிறு பாடங்களாகப் பிரிக்கப்பட்டு, விளக்கப்படங்களையும் புத்திமதிகளையும் அடக்கியுள்ளது.

பிரதிவிலை: ரூபா 1-00

10 அல்லது கூடியபிரதிகள் வாங்குவோருக்கு
20%கழிவு கொடுக்கப்படும்.

மனேஜர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. M. B. 3186

கந்தரோடை
விசுவநாதர் தருமலிங்கம்
— வழக்காளி.

எதிராக

1. காலஞ்சென்ற யோண் முருகேசு செல்வநாயகத்தின் ஆதனங்களின் தத்துவகாரன். தற்போது கண்டி, நாஷனல் அன்ட் கிறின்ட்லிபாங்கில் வேலைசெய்யும் செல்வநாயகம் செல்வராசா.

யாழ்ப்பாணம் பீச்ருேட்
2. டக்றர் எஸ். சுப்பிரமணியம்
கண்டி, நம். 46, கில்ஸ்றீற்
3. கனகநாயகம் சங்கரகுமாரன்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3186-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம்ஆண்டு சித்திரைமீ 8-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,240-உம் ரூபா 4,000-க்குப் 14-12-59 தொடக்கம் 10-6-1960வரை 6வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 292ரூபா 60சதமும்.

காணி விபரம்

... யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோயிற்பற்று, பறுகுகாடு சுண்டிக்குளியிறை 'நாகந்தனை' பர. நில. இலா. இரண்டும், (ப. நி. இ. 2) கிணறும், வீடும், மற்றும் கட்டிடங்களும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. (சோமசுந்தரம் லேன்) வடக்கு — நல்லதம்பி ஹென்றிக்குப, பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு — காலஞ்சென்ற கவுரியேல்பிள்ளை பெண் மேரிப்பிள்ளையின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம். தெற்கு — ஞானம் பெண் விக்ரோறியாவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் இல. D199/60-இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் இக்கோட்டின் M. D. 2231-ம்இலக்க வழக்குத்தீர்வைக்கமைவாய் விற்கப்படும்.

1961-ம்ஆண்டு மாசிமீ 28-ந்திகதி.

செ. விசாகரத்தினம்,
கொம்மிஷனர்.
நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



நன்றியறிதல்

எனது தாயார் எனக்காக இரந்துகேட்ட விண்ணப்பங்களுக்குச் சதாசகாயமாதா இரங்கி அருள்புரிந்ததற்காக என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

சதாசகாயமாதாவே, எங்களை மென்மேலும் ஆசீர்வதித்தருளும்.

பி. எஸ். எக்ஸ். ஆர். மரியதாஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

● **உலகின் மிகப்பழைய மேற்றிராணியார் காலமானார்:** பிறேசில் நாட்டைச் சேர்ந்தவரும் 1907-இல் மேற்றிராணியாராக நியமனம் பெற்றவருமான அந்தோனியோ அகுஸ்தோதெ அசீஸ் என்ற அதிமேற்றிராணியார் தமது 97-வது வயதில் சிலநாட்களுக்குமுன் மரணமடைந்தார்.

● **பாப்பரசரும் தபசுகாலமும்:** விபூதித்திருநாளன்று பரிசுத்த தந்தையவர்கள் சென்ற ஆண்டு செய்தது போலவே சாந்தா சபீனாஎன்ற ஆலயத்துக்கு விஜயம்செய்து அங்கு நடந்த திருச்சடங்குமுறையில் கலந்துகொண்டார். அதேபோல் தபசுகாலத்தின் எல்லா ஞாயிறுகளிலும் ரோமையில் தொழிலாளர் வசிக்கும் பகுதிகளிலுள்ள ஆலயங்களைத் தரிசிக்கச் செல்வார்.

● **கியூபாவில்**ஹாவானா நகருக்கருகில் மரியானோஎன்ற இடத்தில் அண்மையில் ஞாயிறுபூசையின்போது நடந்த பிரசங்கத்தில் குருவானவர் கம்யூனிசத்தைக் கண்டனம்செய்தார். உடனே பிரதமர் காஸ்த்ரோவின் கைக்கூலிகள் சுமார் 100பேர் சேர்ந்து கோயிலுக்குள் நுழைந்து, ஆசனங்கள் மீது ஏறிக் கலவரம்செய்தனர். வசை மொழிகள்பாடிக் கூச்சல்போட்டனர்.

● **பொலீவியாவில் விவாகரத்து:** பொலீவியாவில் ஜனாதிபர் எதிர்த்து வோட்டளித்தும், பாராளுமன்றம் விடாப்பிடியாய் இருந்து விவாகரத்துக்கான மசோதாவைச் சட்டமாக்கிவிட்டது. இதனால் அங்குள்ள கத்தோலிக்க வட்டாரங்கள் பெரிதும் கவலையுற்றிருக்கின்றன. பாஸ் எஸ்டென்ஸோ என்பவர் பொலீவியாவின் இன்றைய ஜனாதிபர்.

● **இராப்போசன ஆலயம்:** யெருசலேமில் உள்ள இராப்போசன ஆலயத்தைக் கடந்த பல வருடங்களாகப் படைவீரர்கள் பறிமுதல் செய்து வைத்திருந்தனர். அதை இப்போது பிரான்சிஸ்கன் சபைக் குருமாரிடம் திருப்பிக் கொடுத்துள்ளனர். அது மீண்டும் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

● **லூர்து நகருக்குச்** சென்ற ஆண்டில் மட்டும் 20 இலட்சம் திருயாத்திரிகர்கள் வந்துசென்றனர் என்று இம்மாதம் முதல்தேதியன்று லூர்து நகரின் நகராட்சிக்கழகம் அதிகாரபூர்வமாகப் புள்ளிவிபரம் வெளியிட்டது.

● **ஹங்கேரியில் புதியகலகமா?** கடந்த சில மாதங்களில் ஹங்கேரியின் கம்யூனிஸ்த அரசினர் ஏறக்குறைய 50 குருமாரைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர். ஷவோய் என்ற மேற்றிராணியாரை அவரது மாளிகையிலேயே அடைத்துவைத்துள்ளனர். "அரசாங்கத்துக்கு விரோதமாகச் சதிசெய்தார்கள்" என்பது குற்றச்சாட்டு. திருச்சபைக்கு எதிராக மீண்டும் ஒரு கலகம் ஆரம்பிக்கத்தான் இவ்வேற்பாடு என்று சொல்லப்படுகிறது.

## ஏழைகளின் சின்னச் சகோதரிகள்

"எங்களுக்குத் தேவனிலேயே நம்பிக்கைஉண்டு. பணத்தில்அல்ல. ஆகவேதான் நாங்கள்நாளைக்கு என்ன தேவை என்பதுபற்றிக் கவலைப்படுவதில்லை, அந்தப்பொறுப்பை நல்லமனதுள்ளவர்களின்கைகளில் விட்டுவிட்டோம்" என லொஸ் ஏஞ்சலஸ் நகரிலுள்ள புனித அன்னம்மாள் வயோதிகர் நிலையத்தலைவியான அல்டொயி தாயார் அண்மையில் பத்திரிகைநிருபர்களிடம் கூறினார். 54வருடங்களாகச் சிறப்புடன் இயங்கிவரும் இந்த வயோதிகர் நிலையத்தைப்பார்வையிடப் பல பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

இந்த வயோதிபர் நிலயம் நான்கு மாடிக்கட்டிடமொன்றைக் கொண்டது. 180 வயோதிபர்கள் இந்நிலயத்தில் தங்கியுள்ளனர். தலைவியுட்பட 15 சந்நியாசிகள் இவர்களைப் பராமரித்து வருகின்றார்கள். "இப்பராமரிப்பு நிலயத்தைச் சிறப்புற நடாத்துவதில் எங்களை எதிர்நோக்கும் இன்னல்கள் ஏராளம். அதையிட்டு நாங்கள் கவலை கொள்வதில்லை. பரலோக பாதுகாவலரான அர்ச். சூசையப்பரும் பூலோக நற்சிந்தனையாளர்களும் எங்களைக் கைவிடுவதில்லை" எனத்தாயார்விபரித்தார். இந்நிலயத்துக்கு ஒருமாதம் தேவையான இறைச்சிக்குமட்டுமே 4,500 ரூபாய்கள் செலவிடப்படுகின்றனவாம்.

தினசரி அதிகாலையில் நான்குகன்னியர்கள் தருமங்களைச்சேர்க்கப்புறப்படுவர். பகல்முழுதும்நகரெல்லாம்சுற்றி மாலைவேளையில் சோர்வுடன் திரும்புவர். ஆயின் அவர்களது பெட்டிகளிலும் பைகளிலும் ஏராளமான உணவுப் பொருட்கள், நாணயங்கள், உடைகள் முதலிய தருமப்பொருட்கள் காணப்படும். தருமம் கேட்கச் செல்வது எப்போதுமே இன்பமானதோர் நிகழ்ச்சியன்று. பல எதிர்பாராத சங்கடங்களும் விளைவதுண்டு. இக்கன்னியர்கள் கிறிஸ்துவுக்காக அவற்றைச் சகித்துக்கொள்கின்றனர். தங்கள் வயோதிபர்கள் எந்தவித சங்கடங்கட்கும் ஆளாகக்கூடாதென்பதே அக்கன்னியர்களின் குறிக்கோள்.

## பொதுவுடைமைப் பத்திரிகையின் பிரலாபம்

வார்சோ நகரில் வெளியாகும் கம்யூனிஸ்த வாரப்பத்திரிகையொன்று இந்நகரில் வாழும் நாத்திகர்களின் தொகை மிகக்குறைவென்று அண்மையில் பிரலாபித்திருக்கிறது. வார்சோவில் சுமார் 55,00,000 மக்கள் எந்தச் சமயத்தையும் அனுசரியாதவர்களெனப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. இதுவா சொற்பம்.

## திபேத்தில் கம்யூனிஸ்தரின் அட்டகாசம்

சில வருடங்கட்கு முன்னர் திபேத்தில் சந்நியாசமடமொன்றை நிறுவுவதற்காக, சுவிற்செலாந்திலிருந்து புறப்பட்டுச்சென்ற புனிதபேர்னட் துறவிகளனைவரும் கம்யூனிஸ்த காவலில் வைக்கப்பட்டுள்ளனரெனச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. இத்துறவிகளின் தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள மார்ட்டிக்னி என்னுமிடத்திலிருந்து இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எல்லா கத்தோலிக்க தேவாலயங்களும் கொள்ளையடிக்கப்பட்டபின் வேறுதேவைகட்காக உபயோகிக்கப்படுகின்றன. கத்தோலிக்க நூல்கள், இலக்கியங்கள், துண்டுப்பிரசுரங்கள், செபப்புத்தகங்கள் யாவும் தீக்கிரையாக்கப்பட்டன.

எங்கள் கத்தோலிக்கர்கள், மத்திய நூற்றாண்டுகளில் 'கற்றக்கோம்' எனப்படும் சுரங்கங்களில் இரகசியமாகக் கூடித் தேவாராதனைகளை நடாத்திய கிறிஸ்தவர்களின் நிலையில்உளர். "துறவிகளாகிய எங்கட்கும் குருமாருக்கும் என்ன தீர்வையிடப்படுமோ நாமறியோம். நாம் சீனாவுக்கு அனுப்பப்பட்டோமாகில் மீண்டும் எங்கள் குரலொலியை அகிலஉலகமும் கேட்கமுடியாது" என ஒருதுறவி எழுதியுள்ளார்.

## கி. பி. 2000-ம் ஆண்டில்
### ஸ்கொத்திலாந்து முழுவதும் கத்தோலிக்க மயமாகும்

நாலு நூற்றாண்டுகட்கு முன்னர் ஸ்கொத்திலாந்தில் கத்தோலிக்க மதத்துக்கெதிரான புரட்சிகள் எழுந்தன. இது ஏராளமான கத்தோலிக்க விசுவாசிகள் திருச்சபையிலிருந்து பிரிந்து செல்ல வழிவகுத்தது. ஆயின் கத்தோலிக்க திருச்சபையின் விடாமுயற்சியின் பயனாக ஸ்கொத்திலாந்தில் மீண்டும் கிறிஸ்துவின் மெய்வேதம் பரம்பிவருகின்றது.

வண. ஜோண் கிறே அடிகளார் அண்மையில் வெளியிட்ட புள்ளிவிபரங்கட்கிசைய ஸ்கொத்திலாந்தில் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கத்தோலிக்கர். அந்நாட்டில் 15சத விகிதத்தினர் கத்தோலிக்க முறைமைகட்கிணங்கக் கடந்தவருடத்தில் விவாகம் செய்திருக்கின்றனர். கடந்தசிலவருடங்களாகக் கத்தோலிக்க திருச்சபை அங்கு அடைந்துவரும் முன்னேற்றத்தைக்கொண்டு கி. பி. 2000-ம் ஆண்டிலே ஸ்கொத்திலாந்து முழுவதும் ஓர்கத்தோலிக்க நாடாக விளங்குமென அவதானிகள் கருதுகின்றனர்.

## பொதுவுடைமையின் சிநேகப் பல்கலைக் கழகம்

பிறநாட்டவருக்கென, சிறப்பாய் ஆபிரிக்கா, ஆசியா, தென்அமெரிக்கா நாடுகளிலிருந்துவரும் மாணவருக்கென மொஸ்கோவில் ஓர் இலவச சர்வகலாசாலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இது "மக்களின் சிநேகப் பல்கலைக் கழக"மென அழைக்கப்படுகிறது.

35வயதுக்குட்பட்டவர்கள் சாதி, மத, இனப் பாகுபாடின்றிச் சர்வகலாசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். மத்தியதரப் படிப்பைத்தத்தம்நாடுகளிலேயே முடித்திருக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனை மாத்திரமுண்டு. கல்வி, விடுதி, மருத்துவச் செலவுகளும், மொஸ்கோவிற்குப் போய்த்திரும்பும் பிரயாணச் செலவும் இலவசமாய்க் கிடைக்கும்.

தற்பொழுது 500 மாணவர் அங்கு பட்டக்கல்வி பயிலுகின்றனர். இவர்களுள் 192 ஆபிரிக்கரும், 142 ஆசியரும, 120 தென்அமெரிக்கரும், 46 மத்தியகிழக்குத் தேசத்தவரும் உளர். வருங்காலத்தில் 4,000 மாணவரை அனுமதிக்க எதிர்பார்க்கப்படுகிறது. பொறிஇயல், வைத்தியம், விவசாயம், பௌதிகம், பொருளாதாரக்கலைகளில் பட்டங்கள் அளிக்கப்பெறும்.

### ஆபிரிக்க மாணவர் பீற்றலைக் கண்டுவிட்டனர்

மொஸ்கோ பல்கலைக்கழகத்திலுள்ள **ஆபிரிக்க, மத்தியகிழக்குத் தேச** மாணவர் தமது மாணவதோழர் தாய்நாடு திரும்பியதும் பொதுவுடைமையைப்பற்றிய உண்மையை ஊரவருக்கு அறிவிப்பதற்காக இரகசிய ஏற்பாடுகள் செய்தனர்.

பொதுவுடைமையர் உயிர் பறிப்பதாக அச்சுறுத்திய போதிலும், கொல்ல ஒருமுறை எத்தனித்தபோதிலும், அஞ்சாமல் நைஜீரியா முழுவதிலும் உபந்நியாசஞ்செய்து, கொம்யூனிசத்தின் பிழையை எடுத்துக்காட்டி வருகிறார் 28 வயதினரான வைத்திய மாணவன் தியோபிலஸ் ஒகொங்வோ. ருஷியாவில் கல்வி பயிலும் காலத்தில், தான் தமது நாட்டவரை அடிமைப்படுத்தும் கருவியாக்கப் படுவாரென உணர்ந்தார்.

"புதிய, ஆபத்தான குடியேற்ற அடிமைமுறையைப் பொதுவுடைமையர் வளர்த்துவருகின்றனர்; இது எதிர்காலத்தில் ஆபிரிக்காவுக்குப் பெரிய ஓர் அச்சுறுத்தலாகும்" என்கிறார். பொதுவுடைமைக்கு விரோதமாக நியாயம்கூறிய ஒரு எகிப்திய மாணவனை, கழகத்தின் 18-வதுமாடியிலிருந்து கீழேஎறிந்தனராம் ருஷியமாணவர்; அவர்கள் தண்டிக்கப்படவில்லை. ருஷியாவிலிருந்து திரும்பிய ஏ. ஆர். அமாரும் (உகண்டா) மைக்கல் ஆபிகியும் (ரோகோ)ஒகொங்வோவுக்கு ஆதரவளித்திருக்கின்றனர்

ருஷியர், சொந்தத் தேசத்திலும், கைப்பற்றிய நாடுகளிலும் இலட்சக்கணக்கான மக்களை அடக்கியாண்டு கொண்டு, **அடக்கப்படும் ஆபிரிக்கரின் ஆதரவாளர்** எனச்சோவியத் தலைவர்கள் கூறிக்கொள்வது முற்றிய மௌட்டீகம் என்றே கூறவேண்டும். கடந்த ஆண்டில் சோவியத் அதிகாரிகளுக்கும் ஆபிரிக்க மாணவருக்குமிடையில் எதிர்ப்பு வெகுவாய் வளர்ந்துவிட்டது. சோவியத் திட்டங்களை உள்ளூரப்படித்த ஆபிரிக்க மாணவரின் கருத்து யாதெனில், ருஷியா சுயநலத்தையும் ஆதிக்கத்தையுமே தேடுகிறது; **ஆபிரிக்காவில் அன்பு** என்பதெல்லாம் உண்மையும் நேர்மையுமற்ற வெறும் பிரசார சுலோகமே அன்றி வேறல்ல

---

### மீட்கப்படாத நகைகளின் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், பெரிய தெருவில் அடைவுபிடித்துவரும் உருணாசலம் சண்முகம் மகாதேவா அவர்களிடம் 1954-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் திகதி தொடக்கம், 1956-ம் ஆண்டு மார்ச்மாசம் 31-ம் திகதி வரையும் அடைவுவைக்கப்பெற்று,குறித்த கால எல்லைக்குள் மீட்கப்படாத நகைகள் 1961-ம் ஆண்டு மார்ச்மாதம் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அவரது அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இடாப்புத் தேவையானோர் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

28-2-61 பொ. இராசரத்தினம்,
யாழ்ப்பாணம். வெந்தீஸ் மேஸ்தர்.

---

### அரசியல்சட்டமும் அடிப்படை உரிமையும்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

**நிதிகள் சபையினதும் அங்கத்தவர்களைக்கொண்ட கூட்டுப்பொறுக்குக் கமிற்றிஒன்றை நியமிப்பதற்கான பிரேரணைஒன்றைச் சனப்பிரதிநிதிகள்சபையில் தான் கொண்டு வரப்போவதாகச் சபைமுதல்வர் திரு. சி. பி. டிசில்வா ஒருமுன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார். அப்போது சர்வகட்சிகளும் தத்தம்திருத்தங்களைச் செய்யமுடியுமென அவர் தெரிவித்திருக்கிறார். அவ்விதம் முடிவு செய்யப்படும் திருத்தங்களைப் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமென்றும் அவர் தெரிவித்தாரோ!**

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday March 9-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org